# தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY

விலை - 50/= | இதழ் - 19 | 21.05.2023





நிறுவனங்களுக்கு கணக்குப் புத்தகத்தின் அவசியம் 10



எந்த ஒரு தொழிலையும் ரசனையோடு ... 14



திரவப் பால் நுகர்வு 20


# மஞ்சள் பயிர்செய்கை


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



“டொலர் கட்டமைப்பு உலகில் நரம்புபோல் படர்ந்திருக்கிறது. அதிலிருந்து விடுபட்டு மாற்றுக் கட்டமைப்பை உருவாக்குவது அவ்வளவு எளிதல்ல என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. எனினும், டொலர் மயத்திலிருந்து விடுபடும் தற்போதைய போக்கை சாத்தியம், சாத்தியமின்மை என்ற கோணத்தில் மட்டும் அணுகிவிட முடியாது.”

# டொலரின் ஆதிக்கத்திலிருந்து உலகத்தால் விடுபட முடியுமா?

**- முகம்மது ரியாஸ் -**

உலகம் பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக புதிய கட்டமைப்புக்கு ஆயத்தமாகிக் கொண்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மிக சமீபத்திய அறிகுறி, டொலர் மயத்திலிருந்து விடுபட ரஷ்யா, சீனா, இந்தியா, பிரேசில் உள்ளிட்ட நாடுகள் மேற்கொண்டிருக்கும் முயற்சி. தற்போது சர்வதேச அளவில் நிகழும் வர்த்தகத்தில் 80 சதவீதம் அமெரிக்க டொலரில் நிகழ்கிறது. உலக நாடுகளின் அந்நிய செலாவணி கையிருப்பாக டொலரே முதன்மை பங்கு வகிக்கிறது.

விளைவாக, உலக நாடுகள் அமெரிக்க டொலரை சார்ந்து இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. இதனால் உலக அரங்கில் அமெரிக்கா அசைக்க முடியாத சக்தியாக உள்ளது. தற்போது இந்த டெதலர் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. அதாவது டொலருக்கு மாற்றான பரிவர்த்தனை முறையை உருவாக்கும் முயற்சியில் பல்வேறு நாடுகள் இறங்கியுள்ளன.

சென்ற ஆண்டு உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இதையடுத்து ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்தன. இதனால், ரஷ்யாவுடன் ஏனைய நாடுகள் டொலரில் வர்த்தகம் செய்வது சிக்கலுக்கு உள்ளானது. இந்தச்சூழல், அமெரிக்காவின் டொலர் ஆதிக்கத்திலிருந்து விடுபட வேண்டிய தேவையை உலக நாடுகள் மத்தியில் தீவிரமாக்கியுள்ளது.

டொலருக்கு மாற்றான செலாவணியை உருவாக்குவது தொடர்பாக பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா) நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இருப்பதாக சென்ற ஆண்டு ரஷ்யா அறிவித்திருந்தது. இந்தச்சூழலில், சில வாரங்களுக்கு முன்பு சீனா மற்றும் பிரேசில் தங்களுக்கிடையிலான வர்த்தகத்தை டொலருக்குப்பதிலாக தத்தம் கரன்சியிலேயே மேற்கொள்ள ஒப்பந்தம் மேற்கொண்டன.

சவுதி அரேபியா, அர்ஜென்டினா ஆகிய நாடுகளும் இந்தப் பட்டியலில் இணைய உள்ளதாக கூறப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரையில், ரஷ்யா, இலங்கை உட்பட சில வெளிநாடுகளுடன் ரூபாயில் வர்த்தகம் மேற்கொள்வதற்கான கட்டமைப்பை உருவாக்கும் முன்னெடுப்பை ரிசர்வ் வங்கி சென்ற ஆண்டே தொடங்கியது.

டொலர் கட்டமைப்பு உலகில் நரம்பு போல் படர்ந்திருக்கிறது. அதிலிருந்து விடுபட்டு மாற்றுக் கட்டமைப்பை உருவாக்குவது அவ்வளவு எளிதல்ல என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. எனினும், டொலர்மயத்திலிருந்து விடுபடும் தற்போதைய போக்கை சாத்தியம், சாத்திய மின்மை என்ற கோணத்தில் மட்டும் அணுகிவிட முடியாது.



உலகின் அரசியல், பொருளாதார கட்டமைப்பில் நிகழும் முக்கியமான மாற்றத்தின் வெளிப்பாடாக இந்த முயற்சியைப் பார்க்க வேண்டியதாக உள்ளது. டொலர் எப்படி உலகின் முதன்மை அந்நிய செலாவணியாக மாறியது என்பதையும் அதன் வழியே அமெரிக்கா எப்படி உலகில் தன்னுடைய ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டது என்பதையும் தெரிந்துகொள்வதன் வழியே உலகின் கட்டமைப்பில் நிகழ ஆரம்பித்திருக்கும் மாற்றத்தை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இரண்டாம் உலகப் போருக்கு முன்பு வரை ஐரோப்பிய நாடுகள் உலகின் ஆதிக்க சக்திகளாக இருந்தன. அந்த சமயத்தில் பொருளாதார ரீதியாக அமெரிக்கா முக்கிய நாடாக இருந்த போதிலும், அதன் சர்வதேச முக்கியத்துவம் எல்லைக்கு உட்பட்டதாகவே இருந்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகே சர்வதேச அரசியல் தளத்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக அமெரிக்கா உருப்பெற்றது. தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, ராணுவம் என பல தளங்களில் சர்வதேச அளவில் முதன்மை நாடாக அமெரிக்கா மாறத் தொடங்கியது.

அமெரிக்காவின் இந்த வளர்ச்சிக்கு டொலர் பொதுப் பரிவர்த்தனை நாணயமாக மாறியது ஒரு முக்கிய காரணம் ஆகும்.

இரண்டாம் உலகம் போர் முடிவுக்கு வந்து கொண்டிருந்த சமயத்தில் உலகின் பொருளாதாரக் கட்டமைப்பு தகர்ந்து இருந்தது. பணவீக்கம் உச்சத்தில் இருந்ததால் உலக நாடுகளின் நாணய மதிப்பு பெரும் சரிவில் இருந்தது. அதுவரையில் தங்கத்தின்

அடிப்படையில்தான் நாடுகளின் நாணய மதிப்பு கணக்கிடப்பட்டு வந்தது. போர் காரணமாக பொருளாதாரக் கட்டமைப்பு தகர்ந்த நிலையில் புதிய பரிவர்த்தனை மதிப்பை உருவாக்குவதற்கான தேவை ஏற்பட்டது.

அந்த சமயத்தில் உலக அளவிலான தங்கத்தின் இருப்பில் நான்கில் மூன்று பங்கு அமெரிக்காவிடம் இருந்தது. மேலும் ஏனைய நாடுகளின் நாணயங்களுடன் ஒப்பிட அமெரிக்க டொலர் வலுவான நாணயமாக இருந்தது. இதன் காரணமாக அமெரிக்க டொலர் பொது பரிவர்த்தனை நாணயமாக முன்வைக்கப்பட்டு 1 அவுன்ஸ் தங்கத்தின் விலைக்கு நிகரான அமெரிக்க டொலர்மதிப்பு 35 டொலர் என்று நிர்ணயிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம் என்னவென்றால், ஒரு நாடு தனக்குத் தேவையான தங்கத்தை இனி டொலர் அடிப்படையில்தான் வாங்க வேண்டும். ஒரு கட்டத்தில் டொலரின் புழக்கத்துக்கு ஏற்ற அளவில் அமெரிக்காவில் தங்க இருப்பு இல்லாமல் போனது. தவிர, வியட்நாம் மீதான போரினால் அமெரிக்காவின் பொருளாதாரம் கடும் சரிவுக்கு உள்ளாகி இருந்தது.

இந்தச்சூழலில் 1971இல் அப்போது அமெரிக்க அதிபராக இருந்த ரிச்சர்ட் நிக்சன், தங்கத்துக்கும் டொலருக்கும் இடையிலான பரிமாற்ற ஒப்பந்தத்தை ரத்துசெய்தார். அதாவது, இனி டொலரின் மதிப்பு தனித்தது, அதை தங்கத்துடன் ஒப்பிடக் கூடாது என்றார். இந்த அறிவிப்புக்குப் பிறகு உலக நாடுகள் தங்கத்தை இருப்பாக வைத்துக்கொள்வதை விடவும் அமெரிக்க டாலரை இருப்பாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தத் தொடங்கின.

இப்படி உலக அளவில் அமெரிக்க டொலர் அந்நிய செலாவணி இருப்பாக ஆனது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சோவியத் யூனியனும் அமெரிக்காவுக்கு நிகரான வலுவான நாடாக உருப்பெற்றபோதிலும், டொலர் பொதுப் பரிவர்த்தனை நாணயமாக மாறியது அமெரிக்காவை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தது.

இந்தக் காலகட்டத்தில் உலக அரங்கில் வேறு சில முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்தன. காலனியாதிக்கத்திலிருந்த நாடுகள் சுதந்திரம் பெறத் தொடங்கின. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மியான்மர், இந்தோனேசியா, வியட்நாம், துனிஷியா, மொராக்கோ, கானா, வங்கதேசம் உள்ளிட்டவை சுதந்திர நாடாக உருவாகின. இதைத் தொடர்ந்து அமெரிக்கா, சோவியத் யூனியன் தவிர்த்து உலக அரங்கில் ஆசியப் பிராந்தியம் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறத் தொடங்கியது.

குறிப்பாக, 1980களுக்குப் பிறகு சீனா, தென்கொரியா, தாய்வான் ஆகிய நாடுகள்



தொழிற்றுறை வளர்ச்சியில் முக்கியத்துவம் பெற்றன. இந்தக் காலகட்டத்தில் தொழில் செயற்பாடுகளை மேலும் அதிகரிப்பதற்கான தேவை உலகஅளவில் உருவானது. பல்வேறு நாடுகளில் தொழில்துறையில் அரசு நிறுவனங்களே ஆதிக்கம் செலுத்திவந்தன.

தொழில் செயல்பாடுகளைப் பெருக்க வேண்டுமென்றால், தனியார் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாராளமயக் கொள்கைகள் அறிமுகமாகத் தொடங்கின. நாடுகளிடையிலான வர்த்தக, தொழில் கொள்கையில் சீர்த்திருத்தங்கள் நிகழ்ந்தன. தனியார் மயமாக்கம், நாடுகளிடையே தடையற்ற வர்த்தகம், தொழில்சார் கட்டுப்பாடுகளில் தளர்வு என தாராளமய கொள்கைகள் முன்வைக்கப்படலாயின. இதன் தொடர்ச்சியாக 1990-களில் உலகமயமாக்கல் நிகழ்ந்தது. நாடுகள் சந்தைகளாக அணுகப்படலாயின.

உலகமயமாக்கல் வழியாக ஆசியா பெரும் வளர்ச்சி நோக்கிப் பயணித்தபோதிலும், உலக மயமாக்கலின் மிகப் பெரிய பலனை அமெரிக்காவே அடைந்தது. சோவியத் யூனியனின் உடைவு அமெரிக்காவுக்கு பல சாதகமான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்தது.

உலகமயமாக்கலால் சர்வதேச அளவில் தொழில்சார் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட நிலையில், அமெரிக்க நிறுவனங்கள் உலகளாவிய அளவில் கிளைபரப்பத் தொடங்கின. தன்னுடைய தொழில் மற்றும் தொழில்நுட்ப கட்டமைப்பு வழியாக அமெரிக்கா உலகச் சந்தையில் வலுவான இடத்தைப் பிடித்தது. அமெரிக்காவின் ஏற்றுமதி பலமடங்கு உயர்ந்தது.

அமெரிக்காவில் வெளிநாட்டு முதலீடுகள் குவிந்தன. இதனால், வேலைவாய்ப்புகள் அதிக அளவில் உருவாகின. உலகமயமாக்கல் காரணமாக உலக நாடுகளிடையிலான வர்த்தகம் அதுவரையில் இல்லாத அளவில் உச்சம் தொட்டதால், டொலர் பயன்பாடு அதிகரித்தது. இதனால், அதன் மதிப்பு பன்மடங்கு உயர்ந்தது. விளைவாக, உலக அரங்கில் அமெரிக்காவின் ஆதிக்கம் மேலும் வலுப்பெற்றது.

டொலரை சர்வதேச அரசியலில் ஓர் ஆயுதமாக பயன்படுத்தத் தொடங்கியது அமெரிக்கா. அரசியல், பொருளாதார தளத்தில் மட்டுமல்ல கலாச்சார தளத்திலும் அமெரிக்காவின் ஆதிக்கம் மேலோங்க ஆரம்பித்தது. ஆடை, உணவு என அமெரிக்காவின் வாழ்வியல் முறைகள் ஏனைய நாடுகளுக்கு பரவின. ஆனால், தற்போது அமெரிக்காவின் ஆதிக்கம் தளரத் தொடங்கி இருக்கிறது.

எதிர் உலகமயமாக்கல்: 2008இல் லேமன் பிரதர்ஸ் வங்கி முடங்கியதையடுத்து அமெரிக்கா மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. உலகமயமாக்கலால் உலக நாடுகளின் சந்தை ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டிருந்ததால், அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி உலகெங்கிலும் பரவியது. இந்த நிகழ்வால், அமெரிக்கமயத்திலிருந்து விடுபட வேண்டிய அவசியத்தை உலக நாடுகள் தீவிரமாக உணர்ந்தன. இந்தக் காலகட்டத்தில் சீனா தன்னை அமெரிக்காவுக்கு மாற்றான சக்தியாக தீவிரமாக முன்னிறுத்தத் தொடங்கியது.

2012-ல் ஜி ஜின்பிங் சீன அதிபராக பொறுப்பேற்ற பிறகு, சீனா உலகஅரங்கில் மிகப் பெரும் அரசியல் சக்தியாகவும் பொருளாதார சக்தியாகவும் உருவெடுத்துள்ளது. உலகின் கட்டமைப்பை மறுவரையறை செய்வதை தன் இலக்காக சீனா கொண்டுள்ளது.

(06ஆம் பக்கம் பார்க்க)

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# அரசாங்கத்தின் உபாயம் என்ன?

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பை எவ்வாறு முன்னெடுப்பது என்பதில் தம்முடைய நிலைப்பாட்டை அரசாங்கம் இன்னும் வெளிப்படுத்தவில்லை. எதிர்க்கட்சிகளும், பொருளாதார நிபுணர்களும் தெரிவிக்கும் கருத்துக்களைத்தான் மக்கள் கேட்க வேண்டியுள்ளது. இந்தப் பின்னணியில் கடந்தவாரம் இலங்கை வந்திருந்த ஐ.எம்.எப். பிரதிநிதிகள் குழு முன் வைத்துள்ள கருத்துக்கள் முக்கியமானவை.

“நிச்சயமற்ற ஒரு நிலையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கம் உடனடியாக செயற்படவேண்டும். இவ்வாறு செயற்படவில்லையென்றால் வட்டி வீதங்கள் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்” என்று ஐ.எம்.எப். தூதுக்குழுவின் தலைவர் பீற்றர் பிரீர் தெரிவித்திருக்கின்றார். “இந்த நிலைமையைக் கையாள்வதற்கான தமது உபாயம் என்ன என்பதை இலங்கை அரசாங்கம் விரைவில் வெளியிட வேண்டும்” என்றும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

இதனை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளில் ஐ.எம்.எப். தலையிடப்பேவதில்லை என்பதையும் தெளிவுபடுத்திய அவர், இந்த விவகாரத்தில் தாம் தொடர்ச்சியாக இலங்கை அரசாங் கத்துடன் தொடர்புகளைப் பேணி வருவதாகவும், பொருளாதார மற்றும் நிதித் துறைகளில் ஸ்திரத் தன்மை பேணப்படுவதை உறுதிப்படுத்துவதில் தாம் அக்கறை கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். கடன் மறுசீரமைப்பு தொடர்பான இறுதி உடன்படிக்கை செப்ரெம்பர் மாதத்தில் கைச்சாத்திடப்படும் என தாம் எதிபார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை வந்திருந்த ஐ.எம்.எப். தூதுக்குழு ஜனாதிபதி, மத்திய வங்கி ஆளுநர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட முக்கியஸ்தர்கள் பலரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திய பின்னரே இந்தக் கருத்துக்களை அவர் முன்வைத்திருந்தார். இலங்கைக்கு ஐ.எம்.எப். வழங்கியிருக்கும் கடனுதவி, அதற்காக கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையின் நிபந்தனைகள், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் எவ்வாறான உபாயத்தை கடைப்பிடிக்கப்போகின்றது என்பன தொடர்பாகவே இந்தச் சந்திப்புக்களின்போது முக்கியமாகப் பேசப்பட்டிருக்கின்றது.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுக்கள் ஓரளவுக்கு முடிவடைந்திருக்கின்றன. உள்நாட்டு கடன் மறுசீரமப்பை அரசாங்கம் எவ்வாறு செயற்படுத்தப்போகின்றது என்பதைத்தான் நாட்டு மக்களும் சர்வதேச சமூகமும் எதிர்பார்த்திருக்கின்றது. இது குறித்த தமது தந்திரோபாயத்தை வெளிப்படுத்துவதில் அரசு தடுமாறுவதைத்தான் காணமுடிகின்றது. வங்கி வைப்புக்கள் மீதோ, ஊழியர் சேமலாப நிதியத்தின் மீதோ கை வைக்கப்போவதில்லை என்று சொல்கின்றார்களே தவிர, எதனைச் செய்யப்போகின்றார்கள் என்பதை அரசாங்கம் சொல்லவில்லை.

இனிமேலும் காலத்தைக் கடத்தாமல், உள்நாட்டுக் கடன் மறுசீமைப்பில் தமது உபாயம் என்ன என்பதை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



## உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு

கடந்த வாரம் தமிழர் பொருணம்மியம் வெளியிட்டிருந்த “உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு என்றால் என்ன?” என்ற தலைப்பில் சுவாமிநாதன் சர்மா எழுதியிருந்த கட்டுரை சிறப்பானதாகவும், உயர் கல்வி மாணவர்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாகவும் இருந்தது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இப்போது பரவலாகப் பேசப்படுகின்றபோதிலும், அது குறித்த முழுமையான விபரங்களை அறிந்துகொள்ள முடியாதவர்களாகவே நாம் இருக்கின்றோம். இந்த நிலையில் அனைவரும் இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இந்தக் கட்டுரையை விரிவாகவும் விளக்கமாகவும் அவர் எழுதியிருப்பது பயனுள்ளதாக இருந்தது. இதற்காக பொருணம்மியம் வார இதழுக்கு நன்றி.

**எம்.பவித்திரா - பேராதனை, கண்டி.**

## மண்ணிலிருந்து ஆபரணங்கள்

மண்ணிலிருந்து ஆபரணங்கள் தயாரிக்க முடியுமா? என்ற ஆச்சரியத்துடன் கடந்த வாரம் வெளிவந்திருந்த கிருசாந்த் நிதசாவின் நேர்காணலைப் படித்தேன். எம்மவர்கள் எந்தளவுக்கு ஆக்கத் திறனுடன் உழைக்கின்றார்கள், அவர்களுடைய படைப்பாற்றல் எந்தளவுக்குள்ளது என்பதை அந்த நேர்காணல் வெளிப்படுத்தியது. சிறப்பான நேர்காணல். பலருக்கு இது ஒரு முன்னுதாரணமாக இருக்கும்.

அதேபோல, மரமுந்திரிகை செய்கை குறித்து ஆனந்தன் பிரேம்நாத் எழுதியிருந்த கட்டுரையும் சிறப்பாக இருந்தது. மரமுந்திரிகைச் செய்கையில் ஈடுபடுவதற்கான உற்சாகத்தைக் கொடுப்பதாகவும் அந்தக் கட்டுரை அமைந்திருந்தது. அழகான படங்களையும் போட்டு அந்தப் பக்கங்களை வடிவமைத்திருந்தார்கள். நன்றி.

**சிவா கனகலிங்கம் - மன்னார்.**

**தமிழர் பொருணம்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருணம்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---

**தமிழர் பொருணம்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ----------------------------------------
**முகவரி** - ----------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------------
**சந்தாக் காலம்** - ----------------------------------------
**செலுத்திய தொகை** - ----------------------------------------
**செலுத்திய திகதி** - ----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,58,200 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,72,500 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** உலகம் பொருளாதார ரீதியாக பெரும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நிலையிலும் இராணுவச் செலவீனங்களுக்காக ஒதுக்கும் தொகை தொடர்ந்தும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. இதற்கு என்ன காரணம்?

**எம்.கோகிலதர்ஷன்,**
**வெள்ளவத்தை, கொழும்பு.**

**பதில் -** உலகப் போர் எதுவும் நடைபெறாத நிலையில் இந்தளவு ஒதுக்கீடு தேவையா என நீங்கள் ஆதங்கப்படுவது தெரிகின்றது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடங்கியது. ஓராண்டு கடந்தும் போர் நீடித்து வருகிறது. இந்தச் சூழலில் உலக நாடுகள் தங்கள் இராணுவக் கட்டமைப்பை வலிமைப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன. இதனால், நாடுகள் இராணுவத்துக்கு செலவிடும் தொகை கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது.

சுவீடனைச் சேர்ந்த ஸ்டாக் ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட பட்டியலின்படி, இராணுவத்துக்கு அதிகம் செலவிடும் நாடுகளின் வரிசையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. சென்ற ஆண்டில் அமெரிக்கா 877 பில்லியன் டாலர் (ரூ.72 இலட்சம் கோடி) இராணுவத்துக்கு செலவிட்டுள்ளது.

இரண்டாம் இடத்தில் உள்ள சீனா 292 பில்லியன் டொலரும் (ரூ.24 லட்சம் கோடி) மூன்றாம் இடத்தில் உள்ள ரஷ்யா 86.4 பில்லியன் டொலரும் (ரூ.7.06 லட்சம் கோடி) ராணுவத்துக்கு செலவிட்டுள்ளன. உலக அளவில் ராணுவத்துக்கான செலவினத்தில் அமெரிக்கா மற்றும் சீனாவின் பங்கு 52 சதவீதமாக உள்ளது.

2022ஆம் ஆண்டு நிலைவரப்படி இராணுவத்துக்கு அதிகம் நிதி ஒதுக்கீடு செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 4-வது இடத்தில் உள்ளது. 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் ராணுவ கட்டமைப்புக்கான ஒதுக்கீடு 81.5 பில்லியன் டொலராக (ரூ.6.68 லட்சம் கோடி) உயர்ந்துள்ளது. இது 2013ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 47 சதவீதம் அதிகம் ஆகும்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் 2020-க்குப் பிறகு சீனாவுடன் எல்லைப் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக இந்தியா தனது இராணுவக் கட்டமைப்பை வலுப்படுத்தி வருகிறது. இதனால் ராணுவத்துக்கு இந்தியா செலவிடும் நிதி 2021-ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022இல் 6 சதவீதம் அதிகரித்துள்ளது.



இவ்வாறு வல்லரசு நாடுகள் தமது போட்டி நாடுகளை எதிர்கொள்ளத் தயாராவது போல ராணுவத்துக்கான ஒதுக்கீட்டை அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. இது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

## கேளுங்கள் தருகின்றோம்

**தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -**
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 320/= |
| பச்சைமிளகாய் | - 250/= |
| தக்காளி | - 350/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 240/= |
| கரட் | - 180/= |
| பூசணி | - 60/= |
| புடோல் | - 250/= |
| வாழைக்காய் | - 80/= |
| சின்ன வெங்காயம் | - 375/= |
| பெரிய வெங்காயம் | - 103/= |
| பாகற்காய் | - 450/= |
| வெண்டிக்காய் | - 120/= |
| கருணைக்கிழங்கு | - 180/= |
| பயற்றங்காய் | - 800/= |
| லீக்ஸ் | - 280/= |
| பீற்றூட் | - 200/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 800/= |
| போஞ்சி | - 450/= |
| கத்தரி - தம்புள்ள | - 360/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 198/= |
| கனடா டொலர் - | 220/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 323/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 221/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 372/= |
| சுவிஸ் பிராங் - | 330/= |
| அமெரிக்க டொலர் - | 299/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 209/= |
| கனடா டொலர் - | 233/= |
| சீன யுவான் - | 45/= |
| யுரோ - | 340/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் - | 234/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 350/= |
| அமெரிக்க டொலர் - | 312/= |

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகியது உலகின் அரசியல் போக்கில் மற்றொரு முக்கிய நிகழ்வாகும். 2008 பொருளாதார நெருக்கடி, சீன - அமெரிக்க மோதல் காரணமாக உலகின் அரசியல், பொருளாதார போக்கு மாறி வந்த நிலையில் கொரோனா அந்த மாற்றத்தை இன்னும் தீவிரப்படுத்தியது.

2020ஆம் ஆண்டு கொரோனா ஊரடங்கின் போது நாடுகளின் எல்லைகள் மூடப்பட்டன. உலகம் அதுவரை சந்தித்திராத தருணமாக அது இருந்தது. சர்வதேச வர்த்தகம் பாதிக்கப்பட்டது. மக்களின் இடம் பெயர்வு நின்றுபோனது. உலகின் பொருளாதாரக்கட்டமைப்பை மறுபரிசீலனை செய்வதற்கான தருணமாக அது அமைந்தது. கொரோனாவைத் தொடர்ந்து உலக நாடுகள் சுயசார்பில் கூடுதல் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. சமீப காலமாக நாடுகளிடையிலான வர்த்தக உறவில் கட்டுப்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, கருத்தியல் ரீதியாகவும் நாடுகளின் எல்லைகள் தடிக்கத் தொடங்கி இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக கடந்த பத்தாண்டுகளாக உலகின் அரசியல் மற்றும் பொருளாதார கட்டமைப்பில் நிகழ்ந்துவரும் மாற்றங்களை எதிர் உலகமயமாக்கல் (Degloba-lisation) என்கிறார்கள். அதாவது உலகமயம் செயலிழந்து வருவதாகவும் உலகம் புதிய கட்டமைப்புக்கு மாறிவருவதாகவும் கூறுகின்றனர்.

இந்த மாற்றத்தை ரஷ்யா - உக்ரைன் போர் தீவிரப்படுத்தியுள்ளது. இந்தப் போரைத் தொடர்ந்து சர்வதேச உறவில் மாற்றங்கள் மிக வேகமாக நிகழ்ந்து வருகின்றன. இந்தியாவை எடுத்துக்கொள்வோம். ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா தடைவிதித்தது.

ஏனைய நாடுகளும் இந்த முடிவைப் பின்பற்ற வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியது. ஆனால், இந்தியா அமெரிக்காவுக்கு கட்டுப்படவில்லை. அமெரிக்காவின் தடையால் ரஷ்யாவின் கச்சா எண்ணெய் விலை சரிந்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் இறக்குமதியை இந்தியா அதிகரித்தது.

இந்தியாவின் இந்த நடவடிக்கை அமெரிக்காவுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. அமெரிக்காவுடன் நல்ல உறவில் இருந்து வந்த போதிலும், சமீப ஆண்டுகளாக உலக அரங்கில் தனக்கென்று தனித்த அடையாளத்தை உருவாக்கும் நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

கடந்த பத்தாண்டுகளில் தீவிர தேசிய வாதத்தை நோக்கி நகர்ந்துள்ள இந்தியா, தற்போது சுயசார்பை இலக்காகக் கொண்டு பயணப்பட ஆரம்பித்திருக்கிறது. இந்நிலையில், ரஷ்யா - உக்ரைன் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு, சர்வதேச உறவில் அடுத்தகட்ட நகர்வாக பார்க்கப்படுகிறது.

இன்னொருபுறம், சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்காவைப் பின்னுக்குத்தள்ளி முதல் இடம் பிடித்திருக்கும் சீனா, இந்த வர்த்தக வாய்ப்பைப் பயன்படுத்தி, தன்னுடைய நாணயமான யுவானை டொலருக்கு மாற்றான அந்நிய செலாவணியாக நிலைநிறுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

அந்தவகையில் தற்போது, உலக நாடுகள் உலகமயத்திலிருந்து விடுபட்டு மல்டிபோலார் கட்டமைப்பை (Multipolar World) நோக்கி நகர்ந்து வருவதாக வரையறுக்கிறார்கள். அதாவது, அமெரிக்காவை மையப்படுத்தியதாக இல்லாமல், உலக நாடுகள் அரசியல், பொருளாதாரம் பலம் கொண்ட தனித்தனி மண்டலங்களாக பிரிந்து செயல்படுவதற்கான கட்டமைப்பு உருவாகி வருவதாகக் கூறுகின்றனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், சீனா ஆகியவற்றை மையப்படுத்தி உலக நாடுகள் தனித்தனி மண்டலங்களாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டொலர்மயத்திலிருந்து விடுபடுவதற்கான முயற்சியை உலகமயத்திலிருந்து விலகும் பயணத்தின் ஓர் அங்கமாக பார்க்க முடியும். அந்தவகையில் தற்போது டொலர் மயத்திலிருந்து விடுபடுவது எந்த அளவுக்கு சாத்தியம் என்பதைத் தாண்டி, அதை நோக்கிய முயற்சியே சர்வதேச முக்கியத்துவம் பெறுகிறது.



## வரி விளம்பரம் classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்




## classified advertisement

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

--------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

--------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

--------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கி தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 075378053

--------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

--------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

--------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளது.
தொடர்புகளுக்கு - 077 6566508.

--------------------------------------

## காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

--------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

--------------------------------------

## தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை - 0772034807

--------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

--------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

--------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

--------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்து தரப்படும்.
0775652282

--------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப் படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 773853765

--------------------------------------

## கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்க: - அ.வே.கோகிலன் - 94717326587

--------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113



# முதலீட்டாளர்கள் தெரிந்திருக்க வேண்டிய முக்கிய இரகசியம்




> **பங்குச் சந்தையைப் பொறுத்தவரை, நன்கு ஆராய்ச்சி செய்து ஒரு பங்கை சரியான விலையில் வாங்கியபின் அதை அடிக்கடி விற்று, வாங்கி வியாபாரம் செய்வதைவிட பல காலம் அதை வைத்திருப்பதே இலாபம் தரும் என்பது வாரன் பஃபெட்டின் கொள்கை. ஆகவேதான், "இயக்கம் அதிகரித்தால் இலாபம் குறையும்" என்கிறார் வாரன் பஃபெட்**

**- எஸ்.ஜகதீசன் -**

இன்றைய உலகில் அனைவரின் கவனத்தையும் பெற்றதாக மாறியிருக்கிறது பணம். முதலீட்டின் மூலம் பணத்தைப் பெருக்கும் வழிகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமெனில், முதலீடுகளில் முன்னோடிகளாக இருக்கக்கூடியவர்களின் - முதலீடுகளால் பெரும் வெற்றிபெற்றவர்களின் வார்த்தைகளை நாம் நன்கு புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

முதலீடுகளால் வெற்றிபெற்றவர்கள் என்றாலே நம் அனைவருக்கும் நினைவுக்கு வருவது வாரன் பஃபெட்தான். 11 வயதில் வெறும் 2,000 ரூபாயுடன் ஆரம்பித்த அவர் பயணம், இன்று அவருடைய 93ஆவது வயதில் ரூ.8,58,000 கோடியைத் தாண்டி இன்னும் நீள்கிறது.

முதலீடு குறித்து அவர் பேசிய, எழுதிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் நமக்கு மிகவும் உதவக்கூடியவை. அவரின் அதிகம் பகிரப்படாத கருத்து ஒன்று உள்ளது. தனது பெர்க்ஷையர் ஹாத்வே நிறுவனத்தின் முதலீட்டாளர்களுக்கான 2005ஆம் வருட செய்திக் கடிதத்தில், "முதலீட் டாளர்களைப் பொறுத்தவரை, இயக்கம் அதிகரித்தால், இலாபம் குறையும் என்பதே ஐசக் நியூட்டனின் நான்காவது இயக்கவிதியாக (Law of Motion) இருந்திருக்கக் கூடும்" என்கிறார். நியூட்டனின் நான்காவது இயக்க விதி என்ன சொல்கிறது?

**நியூட்டனின் இயக்க விதி**

சர் ஐசக் நியூட்டன் பற்றி நமக்குத் தெரியும். சாதாரண மனித மூளைக்கு எட்டாத ரசவாதம், இறையியல், வானியல், கணக்கியல் போன்றவற்றில் ஜாம்பவான். மூன்று இயக்க விதிகளை உலகுக்கு அறிமுகப்படுத்திய அவர், பொருளாதார அறிவிலும் சிறந்து விளங்கினார். மாஸ்டர் ஆஃப் ராயல் மின்ட் என்கிற பொருளாதார உயர் பதவி வகித்த அவர், முதலீட்டிலும் நிதானத்தைக் கடைப்பிடித்து வெற்றிகரமாக இயங்கி வந்தார்.

அனைவரும் தங்கள் முதலீட்டை ரியல் எஸ்டேட்டில் செய்து வந்த அந்தக் காலத்தில், பொருளாதார முதலீடுகளின் முக்கியத் துவத்தை அறிந்த அவர், தனது செல்வத்தை அரசுப் பத்திரங்களிலும், இங்கிலாந்து வங்கியின் வைப்பிலிட்டார்.


1711-ல் அறிமுகப்படுத்தப்பட்ட சவுத் ஸீ நிறுவனத்தின் பங்குகளை மிகக் குறைந்த விலையில் 1712ஆம் வருடம் அவர் வாங்கினார். இங்கிலாந்து அரசின் அமெரிக்க வர்த்தகங்களில் ஒரு பாகத்துக்கு ஏகபோக உரிமை பெற்ற இந்த நிறுவனம், 1720 வரை தன் பங்கு முதலீட்டாளர்களுக்கு நல்ல லாபம் தந்து வந்தது. 1720இல் இங்கிலாந்து அரசு, சவுத் ஸீ நிறுவனத்துக்கு வழங்கிவந்த ஏகபோக உரிமையை அதிகரித்தது. அப்போது நிகழ்ந்த ஏற்றத்தில் தங்கள் பங்குகளை விற்று வெளியேறிய பல புத்திசாலி முதலீட்டாளர்களில் நியூட்டனும் ஒருவர்.

அதே வருடம், சவுத் ஸீ நிறுவனம் புதிய பங்குகளை வெளியிட அனுமதி பெற்று, அதைப் பத்திரிகைகளில் வெளியிட்டு விளம்பரப்படுத்த, அந்த விளம்பரங்களின் கவர்ச்சியால் 1720 ஜனவரியில் 128 ஸ்ரேலிா லிங் பவுண் விற்பனையான சவுத் ஸீ பங்கின் விலை, ஜூன் மாதத்தில் 1,000 பவுணை எட்டியது. இடையில் லாப நோக்கத்துடன் அடிக்கடி வாங்கி, விற்று ருசி கண்ட நியூட்டன், இந்த உச்ச விலையின்போது, தனது மற்ற பாதுகாப்பான முதலீடுகளை விற்று, கிடைத்த தொகையை சவுத் ஸீ நிறுவனத்தில் முதலீடு செய்தார். ஆனால் 1,000 பவுண்டைத் தொட்டிருந்த சவுத் ஸீ பங்கின் விலை, 124 பவுண்டுக்குத் திரும்பியது. 1720 வரை வெற்றிகரமாக இயங்கிவந்த நியூட்டனின் முதலீட்டுப் பயணம் அவரின் 80ஆவது வயதில் 90% நசிந்துபோனது.

"விண்ணிலுள்ள கிரகங்களின் போக்கைக் கணக்கிட முடிந்த என்னால், மண்ணிலுள்ள மக்களின் மூளையற்றத்தனத்தைக் கணக்கிட இயலவில்லை" என்று பங்குச் சந்தையில் தன் தோல்வியை வேதனையுடன் ஒப்புக்கொண்டார் நியூட்டன். இது குறித்து தான் வாரன் பஃபெட் "இயக்கம் அதிகரித்தால் லாபம் குறையும் என்பதே நியூட்டன் எழுதி இருக்க வேண்டிய நான்காவது இயக்க விதி" என்று தன் உரையில் குறிப்பிடுகிறார்.

**முதலீட்டு முறை...**

பங்குச் சந்தையைப் பொறுத்தவரை, நன்கு ஆராய்ச்சி செய்து ஒரு பங்கை சரியான விலையில் வாங்கியபின் அதை அடிக்கடி விற்று, வாங்கி வியாபாரம் செய்வதைவிட பல காலம் அதை வைத்திருப்பதே லாபம் தரும் என்பது வாரன் பஃபெட்டின் கொள்கை. ஆகவேதான், "இயக்கம் அதிகரித்தால் லாபம் குறையும்" என்கிறார் வாரன் பஃபெட். அவர் பங்குச் சந்தை குறித்தே இந்தக் கருத்தைக் கூறியிருந்தாலும், இது ரியல் எஸ்டேட், தங்கம், போன்ற எல்லாவித முதலீடுகளுக்கும் பொருந்துவதாகவே உள்ளது. அதனால் தான் முதலீட்டாளர்கள் அவரைக் கடவுளாகவே கொண்டாடுகிறார்கள்!




# நிறுவனங்களுக்கு கணக்குப் புத்தகத்தின் அவசியம்

**கணக்குப் புத்தகங்களில் பொதுவாக அடங்குபவை.**
**எவ்வாறு பராமரிப்பது?**
**பராமரிப்பதற்கான காரணம்?**
**பராமரிக்காவிட்டால் ஏற்படும் விளைவுகள் எவை?**
**பராமரித்தால் ஏற்படும் நன்மைகள் எவை?**



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையில் பெரும்பாலான தனியுடைமை, பங்குடைமை மற்றும் தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தமது வியாபார கொடுக்கல் வாங்கல்களினை உரிய முறையில் பேணிவருவதில்லை. இதற்குப் பல காரணங்கள் இருப்பினும் இவ்வாறு தமது வணிகக் கொடுக்கல் வாங்கல்களினை சட்டத்திற்கு உட்பட்டு முறையாகப் பேணி வராமையினால் தமது உண்மையான இலக்கினையும், வியாபாரத்தை உயர் தரத்தில் தடம் பதிக்கவும் அவர்களால் முடியாமல் போய் விடுகின்றது. அவர்களுள் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரம் செய்பவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். ஆகவே, தமது வியாபாரத்தினை சிறந்த முறையில் வழிநடாத்தி அதன் மூலம் சிறந்த பெறுபேறுகளினைப் பெற்று அதன்வாயிலாக இலங்கை நாட்டிற்குப் பலவகையில் நன்மைகளை ஏற்படுத்துவதுடன், உலக வர்த்தகத்திலும் சிறப்புடன் ஈடுபடுவதற்குத் தமது கொடுக்கல் வாங்கல்களினை முறையாகப் பேணிவருவது மிகவும் அவசியமாகின்றது.

ஒரு நிறுவனமானது அதன் வணிகக் கொடுக்கல் வாங்கல்களை (பரிவர்த்தனைகளை) துல்லியமாக பதிவு செய்து பராமரிக்க வேண்டிய நிதிப்பதிவுகளின் தொகுப்பை முறையான கணக்கு புத்தகங்கள் குறிப்பிடுகின்றன. இந்தப் பதிவுகள் வணிகங்களின் நிதி செயற்றிறனைக் கண்காணிக்கவும், வரி விதிமுறைகளுக்கு இணங்கவும், தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும் உதவுகின்றன.

சரியான கணக்குப் புத்தகங்களில் பொதுவாக பின்வருவன அடங்கும்:

பணப் புத்தகம் (Cash Book): அனைத்து பணப் பற்றுச்சீட்டுகள் மற்றும் பணம் செலுத்துதல்களைப் பதிவு செய்கிறது.

கொள்முதல் புத்தகம் (Purchase Book): கடனாகக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் அனைத்து கொள்முதல்களையும் பதிவு செய்கிறது.

விற்பனைப் புத்தகம் (Sales Book): கடனாக விற்கப்பட்ட அனைத்து விற்பனைகளையும் பதிவு செய்கிறது.

பொதுப் பேரேடு (General Ledger): சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் உட்பட ஒரு வணிகத்தின் அனைத்து கணக்குகளையும் கொண்டுள்ளது.

ஆய்வேடு உள்ளீடு (General Journal): மேலே உள்ள எந்த புத்தகத்திற்கும் பொருந்தாத அனைத்து பரிவர்த்தனைகளையும் பதிவு செய்கிறது.

இருப்புப் பதிவேடு (Inventory Register): கொள்முதல், விற்பனை மற்றும் சரிசெய்தல் உட்பட அனைத்து பங்கு பரிவர்த்தனைகளையும் பதிவு செய்கிறது.

நிலையான சொத்துகள் பதிவேடு (Fixed Assets Register) : வணிகத்திற்குச் சொந்தமான அனைத்து நிலையான சொத்துகளையும் பதிவு செய்கிறது.



மேற்கூறியவற்றைத் தவிர வணிகங்கள் ஊதியப் பதிவுகள் (Payroll Records), கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தவர்கள் பேரேடு (Debtors' and Creditors' Ledgers) மற்றும் வங்கி சமரச அறிக்கைகள்/ வங்கி கணக்கிணக்கக் கூற்று (Bank Reconciliation Statement) போன்ற பிற பதிவுகளையும் பராமரிக்கலாம். வணிகத்தின் நிதிப் பதிவுகள் துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கு இந்தப் பதிவுகள் அவசியம்.

சரியான கணக்கு புத்தகங்களை எவ்வாறு பராமரிப்பது?

எந்தவொரு வணிகத்திற்கும் சரியான கணக்குப் புத்தகங்களைப் பராமரிப்பது மிகவும் அவசியம். ஏனெனில் இது நிறுவனத்தின் நிதி ஆரோக்கியம் குறித்த துல்லியமான தகவலை வழங்குகிறது. கணக்குப் புத்தகங்களை முறையாகப் பராமரிக்க பின்பற்ற வேண்டிய சில முறைகள் பின்வருமாறு.

சிறந்த அமைப்பை அமைத்தல் (Set up a System): முறையான கணக்குப் புத்தகங்களைப் பராமரிப்பதற்கான முதல் படி ஒரு சிறந்த அமைப்பை அமைப்பதாகும். செலுத்த வேண்டிய கணக்குகள், பெறத்தக்க கணக்குகள் மற்றும் பொதுப் பதிவேடு / லெட்ஜர் கணக்குகள் போன்ற தேவையான அனைத்து கணக்குகளையும் இந்த அமைப்பில் சேர்க்க வேண்டும்.

வணிகக் கொடுக்கல்-வாங்கல்களை பதிவு செய்தல் (Record Transactions):

அடுத்தபடியாக, அனைத்து பரிவர்த்தனைகளையும் பொருத்தமான கணக்குகளில் பதிவு செய்ய வேண்டும். இதில் அனைத்து பற்றுச்சீட்டுகள் மற்றும் கொடுப்பனவுகள், விற்பனை மற்றும் கொள்முதல் மற்றும் பிற நிதி பரிவர்த்தனைகள் ஆகியவை அடங்கும்.

கணக்குகளை சீர்செய்தல் / மறுசீரமைத்தல் (Reconcile accounts): தகவல் சரியானதா என்பதை உறுதிப்படுத்த எல்லா கணக்குகளையும் தவறாமல் சீரமைப்பது முக்கியம். புத்தகங்களில் உள்ள தகவல்களை வங்கி அறிக்கைகள், விலைப்பட்டியல்கள் மற்றும் பிற ஆவணங்களுடன் ஒப்பிடுவது இதில் அடங்கும்.

கணக்கியல் மென்பொருளைப் பயன்படுத்தவும் (use Accounting Software): முறையான கணக்குப் புத்தகங்களைக் கணக்கியல் மென்பொருள் பராமரிக்கும். செயன்முறையை எளிதாக்க உதவும். வணிகக் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் கணக்குகளை சீர்ப்படுத்துதல் போன்ற பல பணிகளை இந்த மென்பொருள் தன்னியக்கமாக செய்யும்.

நிபுணரை நியமித்தல் (Hire a Professional): சரியான கணக்குப் புத்தகங்களைப் பராமரிப்பதற்கு நிபுணரை நியமிப்பது அனுகூலமாக அமையும். கணக்கெழுத்தாளர் மற்றும் கணக்காளர் நிறுவன புத்தகங்கள் துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் இருப்பதை உறுதிசெய்ய உதவும்.

ஒழுங்கமைக்கப்பட்ட முறைமையில் இயங்குதல் (Stay organized): ஒழுங்கமைக்கப்பட்ட முறைமையில் இருப்பது மிகவும் முக்கியம். அனைத்து பற்றுச்சீட்டுகள் மற்றும் விலைப்பட்டியல்களை பாதுகாப்பான இடத்தில் வைத்து, அனைத்து வணிகக் கொடுக்கல் வாங்கல்களும் சரியான நேரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல் அவசியம். இதன் மூலம் புத்தகங்கள் எல்லா நேரங்களிலும் சரியானதாகவும் புதுப்பித்ததாகவும் இருப்பதை உறுதிசெய்ய இது உதவும்.

சரியான கணக்குப் புத்தகத்தை பராமரிப்பதற்கான காரணம்?

சரியான கணக்குப் புத்தகங்களைப் பராமரிப்பதற்கான பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு,

சட்டபூர்வ இணக்கம் (Legal Compliance): பெரும்பாலான நாடுகளில் சட்டப்படி முறையான புத்தகப் பராமரிப்பு தேவைப்படுகிறது. வரிச்சட்டங்கள் மற்றும் பிற சட்டத் தேவைகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்த அனைத்து நிதி பரிவர்த்தனைகளின் துல்லியமான பதிவுகளை வைத்திருப்பது கட்டாயமாகும்.

நிதி மேலாண்மை (Financial Management): முறையான கணக்குப்பதிவு, ஒரு வணிகத்தின் நிதி நிலை பற்றிய தெளிவான தன்மையினை வழங்குகிறது உரிமையாளர்கள் மற்றும் மேலாளர்கள் தகவலறிந்து முடிவுகளை எடுக்க அனுமதிக்கிறது. துல்லியமான நிதிநிலை அறிக்கைகள் செலவுகளைக் குறைக்கக்கூடிய பகுதிகளை அடையாளம் காண உதவும். அங்கு இலாபத்தை அதிகப்படுத்தலாம் மற்றும் கூடுதல் முதலீடுகளைச் செய்யலாம்.

வரிச் சட்டங்களினை முறையாக இணங்குதல் (Tax Compliance): வணிகங்கள் தங்கள் வரிகளைத் துல்லியமாகக் கணக் கிட்டு அறிக்கை செய்வதை முறையான கணக்குப்பதிவு உறுதி செய்கிறது. துல்லியமான நிதிப் பதிவுகள் வணிகங்கள் வரிச் சட்டங்களுக்கு இணங்க உதவுகின்றன. அத்துடன் அபராதங்கள் மற்றும் பிற சட்ட விளைவுகளின் அபாயத்தைக் குறைக்கின்றன.

முதலீட்டாளர்கள் மற்றும் கடன் வழங்குபவர்கள் நம்பிக்கை பேணுதல் (Investors and Lenders confidence): முறையான கணக்கு வைப்பது வணிகங்களுக்கு முதலீட்டை ஈர்ப்பதற்கும் கடன்களைப் பாதுகாப்பதற்கும் எளிதாக்குகிறது. முதலீட்டாளர்கள் மற்றும் கடன் வழங்குபவர்கள் துல்லியமான மற்றும் புதுப்பித்த நிதிப் பதிவுகளைக் கொண்ட வணிகங்களுக்கு முதலீடு அல்லது கடன் வழங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

வணிகச் செயற்றிறன் அதிகரித்தல் (Business Performance): முறையான கணக்குப்பதிவு வணிகங்களுக்கு அவற்றின் இலாபம், பணப்புழக்கம் மற்றும் கடனளிப்பு உட்பட, அவற்றின் செயற்றிறனைப் பற்றிய தெளிவான புரிதலை வழங்குகிறது. இவை, தகவலறிந்து முடிவுகளை எடுக்கவும், செயற்றிறனை மேம்படுத்தவும், அவற்றின் செயற்பாடுகளைச் சரிசெய்யவும் உதவும்.

சரியான கணக்குப் புத்தகத்தை பராமரிக்காததால் ஏற்படும் விளைவுகள் எவை?

சரியான கணக்குப் புத்தகங்களை பராமரிக்க முடியாமல் போனால் அது வணிகங்களுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். அவ்வாறு ஏற்படக்கூடிய விளைவுகள் சில பின்வருமாறு.

சட்டபூர்வ அபராதங்கள் (Legal Penalties): முறையான கணக்குப் புத்தகங்களைப் பராமரிக்காத வணிகங்கள்

(18ஆம் பக்கம் பார்க்க)






- தமிழ்க்கவி -

> வெள்ளெருக்கு வீடுகளில் பூக்க கூடாது என்றாகிறது. ஆனால் வெள்ளெருக்கம் வேரை அதன் நாரை வீட்டில் வைத்திருப்பது பல தோசங்களை நிவர்த்தி செய்ய வல்லது என சாத்திரங்கள் சொல்கின்றன.

# தல விருட்சம்

அதிகாலை நீராடி மலையேறி தெய்வ தரிசனம் செய்து ஆலயத்தை பிரதட்சணம் செய்து விழுந்து வணங்கி, கைகளை கூப்பி வழிபாடு செய்வது தமிழர் மரபு. இந்த ஆலயங்கள் நீர்க்கரைகளிலோ அல்லது மலைக்குன்றுகளிலோ அமைந்திருக்கும். ஆலயங்களை சுற்றிச் தல விருட்சம் என ஒன்றிருக்கும். அந்த மரமோ செடியோ ஆலய வளாகத்தை சுற்றி எங்கும் காணப்படும். வில்வம் வேம்பு நெல்லி, கடம்பு, கொன்றை, வன்னி, ஆல் அத்தி, அரசு, என இவைபற்றி சொல்லிக் கொண்டே போகலாம்.

அத்தனையும் நமது ஆரோக்கியத்தை பேணும் இரு மூலிகைகளாகவும் அபார சக்தியுள்ளவையாகவும் இன்று நிரூபணமாகிவரும் விருட்சங்களாகும். அந்தக் காலத்தில் குளக்கட்டுகளில் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை அங்கங்கே மரங்களின் கீழ் ஒரு கல்லை வைத்து வழிபாடு செய்வார்கள். விநாயகர் வைரவர் காத்தான், காடன், மாடன், குருசுமரம் என பலவகை மரத்தடி வழிபாடுகள் நடக்கும். அநேகமாக இதுவே குளத்து நீரை புனிதமாகவும், குளக்கட்டு நிழல்களை தூய்மையாகவும் வைத்திருப்பதற்கான இலகுவான வழியாகும்.

வெள்ளாமை விளைஞ்ச பிறகு ஆளாளுக்கு பொங்கல் வைப்பார்கள். சில சாமிகளுக்கு கிடாய் வெட்டி கோழிவெட்டி பொங்கலுடன் மாமிச உணவும் படையலாகி வந்திருக்கும் பக்தர்களுக்கு விருந்தாகவும் மாறும். எப்படியாயினும் குளக்கட்டுகளில் மலசலம் கழிப்பது, தீட்டுக் காலத்தில் நடமாடுவது தடை செய்யப்படும். இந்தக் குளத்தில் வளரும் தாவரங்களான வல்லாரை, கொட்டி ஒலு, தாமரையின் இலை முதல் கிழங்குவரை நமக்கு உணவாகும்.

இந்த வகை வழிபாடுகளை சிங்கள மக்களும் செய்வார்கள். அவர்களது பண்பாடுகளில் நோய்களுக்கு மந்திரம் பேயோட்டுதல், செய்வினை சூனியம். எல்லாமே உண்டு. அந்த மந்திரங்களில் சரளமாக தமிழ் மொழி இருக்கும். தமிழ் மக்களின் எல்லா செயல்களிலும் ஆரோக்கியம் சமுதாய முன்னேற்றம் என்பவை கலந்தே இருக்கும். பண்பட்ட படித்த மனிதர்களால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களை படிப்பறிவில்லாத மக்களால் புரிந்து கொள்வது மிகவும் கஷ்டம். எனவே அவர்களுக்கு தெய்வம், பூதம் பேய் பசாசுகளை



காட்டியே வழிநடத்த வேண்டியதாக இருந் தது. அப்படி உருவான சடங்குகளை இப் போதுள்ள பகுத்தறிவுவாதிகளால் ஏற்க முடியாத தன்மை வந்தபோது குளங்கள் அழுக்கு நிறைந்து காணப்படுகின்றன. கும்பிட்ட கற்களும் புனிதமற்றவையா யின. மனித மனங்களும் அழுக்கை அப்பிக் கொண்டன.

விரும்பியதெல்லாம் உணவாகியது. புசித்த போது மட்டுமே உண்டகாலம் போய் ருசித்தவற்றையெல்லாம் வாரிக் கொட்டும் குப்பை மேடாக நமது உடல் மாறிப்போயிற்று. எனது தம்பி வேடிக்கை யாக ஒன்று சொல்வான். ‘அக்கா காலை யிலே ஒரு முட்டையைப் பொரிக்க அதைப் புட்டுடன் புதைத்தேன். மத்தியானம் ஆடு. கோழி இரண்டையும் சுவைத்தேன். இரவு மாட்டிறைச்சியுடன்ரொட்டி முழுந்ததா? இப்போது என் வயிறெனும் சுடலையில் கோழி கூவுகிறது. மாடு கதறுகிறது, ஆடு முடியாமல் படுத்திருக்கிறது. ஏதாவது கஷாயம் வைத்துக் கொடேன்’. நான் சிரித்தேன். ஒரே நாளில் இத்தனை விலங் குகளைப் புதைக்கும் சுடலையாக அவன் மட்டுமல்ல பலர் இன்று அப்படித்தான் வாழுகிறார்கள்.

நான் வேடிக்கைக்காக சொல்ல வில்லை. ஒரு மக்கள் கூட்டத்தின் அணி வகுப்பை பார்க்கும் போது (தொலைக் காட்சியில்தான்) கணிசமான ஆண்களும் நடுத்தர வயதை எட்டிக் கொண்டிருக்கும் பெண்களும் நிறைமாத கர்ப்பிணிகளைப் போல தெரிகிறார்கள். அவர்களால் தமது கால் கட்டை விரலல்களை பார்க்கவே முடியாது. நானும் கூட அப்பிடித்தான். தினமும் வேர்க்க விறுவிறுக்க வேலை செய்கிறேன். ஆனால் உடல் பருமனாகிக் கொண்டே வந்தது. இப்போது தேறிவரு கிறேன். காரணம் முன்னர் கூறிய வழி பாட்டு முறைகள்தான்.

எனக்கு ஏறி இறங்க மலை இல்லை. ஆனால் மலை ஏறுவதைவிட அசாத்தி யமான பலனைத்தரும் பிராணாயாமம். காலையில் எனது மூச்சை எனது கட்டுக் குள் கொண்டு வருவதன் பெரும் பயனை உணரும்போதுதான் அதன் பெருமையை அறிகிறேன். சைவம் மட்டுமல்ல எல்லா மதங்களும் ‘எம்மை எமது சிந்தனையை கட்டுக்குள் வைத்திரு’ என்றுதான் போதிக கின்றன. இதற்கு ஆலயங்களை சுற்றி யுள்ள அரு மரங்கள் எவ்வாறு உதவக் கூடும் என்பதை அறிவோம்.

வேம்பு அகில உலகத்தாலும் சர்வ ரோக நிவாரணியாக காட்டப்படுவது இப்போதுதான். ஆதிகாலத்திலேயே வேப்பெண்ணை இல்லாத பிரசவங் களோ பிள்ளை வளர்ப்போ இருந்ததில்லை. குழந்தை பிறந்த அடுத்தநாள் வேப் பெண்ணை ஒரு துளியில் சூடு காட்டி அதில் பனங்கட்டியை கரைத்து பிள்ளை யின் நாவில் தடவிவிடும் வழக்கம் வீட் டில் பிரசவம் நடத்துவோரால் கடைப் பிடிக்கப்பட்டு வந்தது. பிரசவம் நடக்கும் போது குழந்தை அழுக்கை விழுங்கி விடும் அபாயம் உண்டு. அந்த அழுக்கை இந்த வேப்பெண்ணையில் நனைத்த பனங்கட்டி வெளியேற்றிவிடும். இப்போது வேப்பெண்ணையை விழுங்குமளவுக்கு பிறந்த சிசுவிற்கு தொண்டை ஒத்துழைக் காது என வைத்தியர்கள் சொல்கிறார் கள்.

பெற்ற தாய்க்கு அன்றாடம் வேது வைத்து நீராட்டியபோது அந்த குழை வகைகளில் வேம்பும் இருக்கும். இப்போது பிரசவிக்கும் தாய்க்கு வேது வார்ப்பதே கிடையாது. வைத்தியசாலையில் உடனே நீராடு என்பார்கள். ஏழாம் நாள் வேப்பம் பட்டையை அவித்து அந்த நீரில் பிரசவித்த தாயை குளிப்பாட்டுவாஉகள். அது கிருமி நாசினிதான். அதுவும் இப்போது கிடை யாது.

முன்னர் நடுக்கத்துடன் வரும் காய்ச் சலை குலைப்பன் காய்ச்சல் என்பார்கள். பின்னாளில் அது மலேரியா என மக்கள் அறிந்து கொண்டார்கள். அந்தக்காலத்தில் இந்த குலைப்பன் காச்சலுக்கு வேப்பம்பட்டை தான் அவித்துக் குடித்தார்கள். கோவில் வளவுகளில் வில்வம் வைப்பார்கள். வில் வமரம் ஏராளமான நோய்களை தீர்க்க வல்லது. இவற்றுள் பாலியல் நோய்களும் அடக்கம். அரசமரத்தின் நிழல் அற்புத சக்தி கொண்டது. அரசநிழலில் அன்றாடம் ஒரு மணி நேரம் அமர்ந்தால் உடலில் அளப்பரிய சக்தி கிடைக்கும். புத்தர் ஞானம் பெற்றது இந்த மரத் தின் கீழ் இருந்துதான். உடலை வல்ல மையாக்கி மனதை அமைதியாக்கும் அற்புத சக்தி அரசுக் குண்டு. அரசும் வேம்பும் இணைந்து நிற்பதுண்டு. அந்த இணைப்பை பார்ப்ப வர்கள் அந்த மரத்தடியில் சிறிது நேரம் உட்கார்ந்து செல்வது வழக்கம்.

வன்னி மிகவும் அருகலாக உள்ள மரம். வன்னிமரக்கட்டைகளை உரசி தீயை உருவாக்கினார்கள். வன்னி என் றால் நெருப்பு என்றொரு அர்த்தம் உண்டு. ஆல் பொதுவாக ஆலய வளாகத்தில் தானாக உருவாகுவதுதான். ஆலமரம் நிலத்தில் முளைப்பது மிக மிக அருமை அது எங்காவது மரக்கவட்டைகளில் பனை வட்டுக்களில் கட்டட இடிபாடுகளில் என தானாக பறவைகள் கொண்டுவந்து போட்ட விதையில் முளைப்பதுதான். ஆலமரம் சாய்ந்தாலும் விழுதுகள் அதன் கிளைகளைத் தாங்கி ஒரு மரம் ஏக்கர் கணக்கில் படர்ந்திருப்பதும் உண்டு. அத்தி இத்தி ஆத்தி போன்றவையும் தல விருட்சங்களாக வரும். கொன்றை கல் லாலமரம் குருந்து. போலவே வெள்ளெ ருக்கு தல விருட்டமாக உள்ள கோவில் களும் உண்டு.

“வேதாளம் சேருமே வெள்ளெருக்கு பூக்குமே
பாதாள மூலி படருமே – மூதேவி
சென்றங்கு வாழ்வாளே சேடன் குடி புகுமே
மன்று ஓரம் சொன்னார் மனை.”

நீதி மன்றில் ‘ஓரம்’ பொய்ச்சாட்சி சொல்பவரது மனையில் இதெல்லாம் நடக்குமாம். ஆக வெள்ளெருக்கு வீடுகளில் பூக்க கூடாது என்றாகிறது. ஆனால் வெள் ளெருக்கம் வேரை அதன் நாரை வீட்டில் வைத்திருப்பது பல தோசங்களை நிவர்த்தி செய்ய வல்லது என சாத்திரங்கள் சொல் கின்றன. மரங்களைப் பற்றி இன்னும் ஏராளமாக பேச இருக்கிறது.



**நேர்கண்டவர் - ஞா.கவினி**

# எந்த ஒரு தொழிலையும் இரசனையோடும் நேர்த்தியோடும் செய்தால் வெற்றி பெறலாம்

## பிருந்தா புகைப்படக் கலையகத்தின் நிறுவுனர் பிருந்தா சத்தியசீலன்



வவுனியாவில் புகைப்படத் துறையில் சாதித்து வரும் இளம் பெண் முயற்சியாளர் பிருந்தா சத்தியசீலன் ஒரு துணிச்சல் மிக்க பெண்ணாகவும் பல இளம் பெண்களுக்கு வழிகாட்டியாகவும் உள்ளார். பெண்களால்முடியாது என்று எதுவுமே இல்லை. எந்தத் தொழிலையும் ரசனையோடும் நேர்த்தியோடும் செய்தால் எவருமே வெற்றி பெறலாம் என்கிறார் பிருந்தா புகைப்பட கலையகத்தின் நிறுவுனர் பிருந்தா சத்தியசீலன். தமிழர் பொருண்மியம் வார இதழுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவரது நேர்காணலின் விபரம் வருமாறு-



### புகைப்படத் துறை சார்ந்த ஆர்வம்

காலவோட்டத்தில் எதிர் காலத்தைப் பற்றிய சிந்தனையும் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆவலும் கூடவே வந்து விடும். தற்கால சூழலில் ஒரு பெண் தனித்துவமாக சிந்திக்க வேண்டிய தேவை அதிகமாக இருக்கிறது. அதேபோல் தான் நானும் என்னுடைய எதிர் காலத்திற்காக வருமானத்தை ஈட்ட வேண்டும் என்று எண்ணிய போது முதலாவது எனக்கு பிடித்த தொழிலாக இருக்க வேண்டும் என்று சிந்தித்தேன். ஏற்கனவே புகைப்படத்துறையில் எனக்கு இருந்த கொஞ்ச ஈடுபாட்டை மனதில் வைத்துக் கொண்டு மகிழ்ச்சியோடு இந்தப் பயணத்தை ஆரம்பித்தேன்.

ஒரு பிடித்த துறையை நாங்கள் தெரிவு செய்யும்போது எவ்வளவு கஷ்ரங்கள் பிரச்சினைகள்வந்தாலும்நாங்கள்சோர்ந்து போகும் நேரங்களில் கூட எல்லாவற்றிற்கும் மேலாக ஏதோ ஒரு மகிழ்ச்சி மனதை நிறைக்கும். ஒவ்வொரு நிகழ்வுகளையும் நிழல்களாக இருந்து பதிவு செய்து விட்டு வீடு திரும்பும் போது எங்களுடைய தேடல் நிறைவானது போல தோன்றும்.

மற்றவர்கள் தங்களுடைய நினைவாக வைத்திருக்க விரும்புகிற அவர்களது தருணங்களை அழகான புகைப்படங்களாக அவர்களது கைகளில் கொடுக்கின்ற போது அந்த முகங்களில் தெரியும் பரவசம் எங்களையும் தொற்றிக் கொள்ளும். அதுதான் இன்னும் சகல தடைகளையும் கடந்து இந்த துறையில் நம்மை பயணிக்க வைக்கும் தூண்டுகோல் ஆகிறது.

### சவால்கள்

பெண்கள் எந்த துறையை தெரிவு செய்தாலும் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தான். இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் பயந்து ஒதுங்கி விட முடியாது "நீ ஒரு பெண் இது உனக்கான வேலை இல்லை" எனப் பலர் சொன்னாலும் எனக்கு என் மேல் அளவு கடந்த நம்பிக்கை இருந்தது. உன்னால் முடியாது என்று என்னை ஏளனம் செய்தவர்கள் வியந்து பார்க்கின்ற அளவிற்கு முன்னேற வேண்டும் என்கின்ற அவா எப்போதும் எனக்கு உண்டு. இதற்கெல்லாம் இலகுவான பதில் என்னவென்றால் இவை எவற்றையும் கண்டு கொள்ளாமல் இருப்பதுதான்.

எங்களது நோக்கத்தை அடைய வேண்டுமானால் நாம் இவ்வாறான பல தடைகளை தாண்ட வேண்டும். அதனால் எங்களது வாழ்க்கைக்கு தேவையானவற்றை எடுத்து கொண்டு தேவை அற்றவையை நிராகரித்தாலே போதும் நாம் வெற்றி பெற முடியும். என் போன்றவர்களுக்கு தமக்குத் தேவையானவைகளை சிந்திப்பதற்கே நேரம் போதுமாக இருக்கிறது. இப்படி இருக்க சவால்களை சாதனைகளாக மாற்றுவதே எனது குறிக்கோள்.

### பொருளாதாரம்

நிச்சயமாக இந்தத் துறை நல்ல வருமானம் ஈட்டக்கூடிய தொழிலாக இருக்கிறது. பெண்களுக்கு இது மிகத் தேவையான ஒன்றாகவும் அமையும். அதுமட்டுமன்றி எங்களுக்கு கிடைக்கின்ற அனுபவங்கள்



மூலம் எங்களை இந்தச் சமுதாயத்தில் பலம் மிக்க பெண்களாகவும் அடையாளப்படுத்துகின்றோம். குறிப்பாக ஆரம்பத்தில் எனக்கும் இது வருமானம்இருக்கக்கூடிய தொழிலா என்பதில் சந்தேகம் இருந்தது. ஆனால் இப்பொழுது நான் சம்பாதிப்பதற்கு ஏற்ற தொழிலாகவே இதனைக் கருதுகின்றேன். வருமானம் ஈட்டுவது என்பதற்கு மேலாக எனது எதிர்காலத்தை மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் ஏற்றுக் கொள்வதற்கு இந்த துறை மிகவும் உதவியாக இருக்கிறது.

**கடந்து வந்த பாதைகள்**


கடந்த இரண்டு வருடங்களாக குழுவாக இணைந்தும் தனிப்பட்ட முறையிலும் இந்த துறையில் பணியாற்றி வருகிறேன். சில இடங்களில் ஒரு நாள் முழுக்க நின்று கொண்டே வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கும். ஆரம்பத்தில் அது மிகவும் கஷ்டமாக இருந்தாலும் தற்போது எங்களுக்கு பழக்கப்பட்ட ஒரு விடயமாகிவிட்டது. நாட்கள் போகப் போக துறை மீதான ஆர்வமும் பற்றுதலும் கூடிக் கொண்டே இருக்கிறது. அதனால் சிறிய கஷ்டங்கள் இதனையும் நாங்கள் பொருட்படுத்துவதே இல்லை. இன்னும் இந்த துறையில் முன்னேறிச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் நம்மை உந்தி தள்ளிக் கொண்டே இருக்கிறது.

ஆயினும் சில வேளைகளில் பல தவிர்க்க முடியாத இன்னல்களையும் சந்திக்க வேண்டி இருந்திருக்கிறது. உதாரணமாக நாம் பணியாற்ற செல்லும் இடங்களில் சிலரின் தவறான பார்வைகள், தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் முக நூல் விளம்பர பக்கங்களில் தவறான பதிவுகள் (comments) என்று பலவற்றை கடந்து வரவேண்டியும் ஏற்பட்டது. இத்தகைய சந்தர்ப்பங்களின் போது சில நேரங்களில் மன உழைச்சலுக்கு தள்ளப்படுகிறோம். இருந்தாலும் நாம் போகும் பாதை சரியாக இருப்பதனாலேயே இவ்வாறான தடைகள் ஏற்படுகின்றன. நாம் அதை தாண்டி செல்ல வேண்டும் என்பதும் நமக்கு நன்றாக விளங்குகின்றது. ஆரம்ப காலங்களில் நம்ப மறுத்தவர்கள் என்னை பார்த்து "உங்களை நினைத்து பெருமையாக உள்ளது" என்று பாராட்டுகின்றனர். யார் என்று தெரியாமல் இருந்த என்னை இன்று உங்கள் வரை கொண்டு வந்துள்ளது இதுவே எனது முதல் சாதனையாக நினைக்கிறேன்.

**பாராட்டுக்கள் விருதுகள்**

உண்மையில் முதலாவது என்னை அவமானப்படுத்தியவர்கள் முன்னிலையில் நிமிர்ந்து இருப்பது, மற்றையது என்னை நேசிப்பவர்களுக்கு நான் பெருமையை தேடிக் கொடுப்பது இதனைத்தான் என்னுடைய முதல் கௌரவமாக நினைக்கிறேன். அத்தோடு சமூகத்தில் #Vavuniya district beautification Association bridal show 2020. #jaffna Arunthathee maatru mothiram brindal show 2023. போன்ற விருதுகளையும் பெற்றுள்ளேன். ஒரு பெண் புகைப்பட கலைஞராக உங்களை சந்தித்த மையையிட்டு நான் பெருமை கொள்கிறேன். இத்தோடு எனது இளம் சகோதர சகோதரிகளுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் அவரவர் பிடித்த துறைகளை தேர்வு செய்து அதில் தேர்ச்சி பெற்றவர்களாக மாற வேண்டும் ஆண் பெண் என்ற பாகுபாடு இன்றி எந்த தொழிலையும் எவரும் செய்யலாம். இது இவருக்கானது. அது அவருக்கானது. என்று எந்த வேறுபாடும் இல்லாது செய்யும் தொழிலை ரசனையோடும் திறம்படவும் செய்தால் நிச்சயமாக அந்த துறையில் நாங்கள் வெற்றி பெற்றவர்களாக மாறலாம். சமூகம் எங்களை அங்கீகரிக்கும் வகையில் நாங்கள் எங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும். சவால்களை சாதனைகள் ஆகும் திடத்தை இளையவர்களாகிய நாங்கள் சரியாக பயன்படுத்திக் கொண்டோமானால் நாடும் நாமும் முன்னேற முடியும். என்கிறார் வெற்றியாக தனது புகைப்படக்கலை பயணத்தை தொடர்ந்து கொண்டிருக்கும் பிருந்தா அவர்கள்.







கடந்த காலங்களில் இலங்கையில் மஞ்சளின் விலை தங்கத்தின் விலைக்கு நிகராக இருந்தது என்றால் அது மிகையாகாது.

# மஞ்சள் பயிர்செய்கை



ஆனந்தன் பிரேம்நாத்
லக்சி பண்ணை

மஞ்சள் எமது முன்னோர்களின் காலத்திலிருந்து தற்பொழுது வரை மிக முக்கியமானதும் அத்தியாவசிய பொருள்களில் ஒன்றாகவும் உள்ளது.

மஞ்சள் ஆனது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் என்பதால் உலகில் உள்ள அனைவரும் தங்களுடைய உணவுகளில் சேர்த்துக் கொள்கின்றார்கள்

அதிலும் குறிப்பாக தமிழர்களின் பயன்பாட்டில் இன்றியமையாத ஒன்றாகும் அதாவது உணவு பயன்பாட்டில் மட்டுமன்றி சடங்கு சம்பிரதாயம், மற்றும் தொற்று நீக்கியாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதோடு தமிழர்களின் மத்தியில் மஞ்சளானது மகத்துவமான பொருளாக பார்க்கப்படுகின்றது

கடந்த காலங்களில் இலங்கையில் மஞ்சளின் விலை தங்கத்தின் விலைக்கு நிகராக இருந்தது என்றால் அது மிகை ஆகாது. மஞ்சள் ஒரு வெப்ப மண்டலப்பயிர் ஆகும்.

தண்டில் உள்ள முளையிலிருந்து வளர்ந்து, மண்ணுக்குள் செல்லும் நீண்ட வேர்தான் மஞ்சள் கிழங்கு.

மஞ்சள் ஆசியாவில் பல இடங்களில் பயிரிடப்பட்டுகிறது. குறிப்பாக தென்னிந்தியாவில் அதிக அளவாக உற்பத்தி செய்யப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

தற்பொழுது இலங்கையிலும் மஞ்சள் பயிரிடுவதற்கு. அதிகமான விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றார்கள்.

மஞ்சளைப் பொறுத்தவரை இருபதுக்கும் அதிகமான ரகங்கள் உள்ளன.

அதில் அரிதான கருமஞ்சலும் உள்ளது சாதாரண மஞ்சளை விட கருமஞ்சள் விலை அதிகம் ஆகும் சாதாரணமாக ஒரு கிலோ கருமஞ்சள் இந்தியன் ரூபாய் மதிப்பில் பத்தாயிரம் ரூபாய் ஆகும். என்கின்றார்கள் விவசாயிகள்

பத்தாயிரம் ரூபாய் கொடுத்தும் கருமஞ்சள் ஆனது சாதாரணமாக கிடைத்து விடாது மிக மிக அரிதான ஒன்று என்றால் அது மிகையாகாது.

நடவுக்கு ஏற்றதும், அதிகூடிய விளைச்சலை தரக்கூடியதுமான ரகத்திணை தெரிவு செய்ய வேண்டும்.

நடுகை செய்ய ஆரம்பிக்கும் போது வைகாசி மாதம் முதல் ஆனி மாதம் வரையிலான காலப்பகுதியில் நடவு செய்ய வேண்டும்.

இதுவே மஞ்சள் நடுகைக்கு ஏற்ற காலங்கள் ஆகும்.

இந்தக் காலத்தினை தவிர்த்து வேறு காலங்களில் நடவு செய்தால். எதிர்காலத்தில் மஞ்சள் அறுவடை செய்யும் போது பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டி வரும்.

நல்ல வடிகால் வசதியுடைய செம்மண் மற்றும் இருவாட்டி மண். மஞ்சள் பயிர்ச்செய்கைக்கு ஏற்றது. குறிப்பாக களிமண், கற்கள் அதிகம் உள்ள இடங்களில் வளராது.

அதிலும் மிக இறுக்கமான மண்ணில் வளராது. அதிகளவு நீர் ஊற்று உள்ள இடங்களிலும் வளராது

மஞ்சள் பயிர் ஆனது நிலத்தின் நீர் அதிகமாக இருந்தாலும் இலைகள் மஞ்சளாக மாறும் அதே நிலத்தில் நீர் குறைவாக இருந்தாலும் இலைகள் மஞ்சளாகி நுனி கருகும்.

முதலில் நிலத்தை களை இல்லாமல் குறுக்கு-நெடுக்காக உளவு செய்த பின் மீண்டும் ஒரு வாரம் கழித்து இரண்டு முறை உழவு செய்ய வேண்டும்.

கடைசி உழவின் போது ஏக்கருக்கு 4 டன் மக்கிய ஆட்டு எரு அல்லது மாட்டு எரு அல்லது கோழி எரு இட்டு மண்ணுடன் கலந்து உழவு செய்ய வேண்டும்.

பின்பு மூன்று அடி அகலத்துக்கு மேட்டுப்பாத்தி அமைக்க வேண்டும். பாத்தியின் நீளத்தை இடத்துக்கேற்ப அமைத்துக் கொள்ளலாம்.

ஓர் ஏக்கருக்கு 750 கிலோ விதை கிழங்குகள் தேவைப்படுகின்றன.

நடும் பொழுது ஒவ்வொரு பாத்தியிலும் அகலத்தில் நான்கு வரிசைகள் வருமாறு 20 செண்டிமீட்டர் இடைவெளியில் தொடராக 4 செண்டிமீட்டர் ஆழத்தில் நடவேண்டும்.

அடுத்த பாத்தி அமைக்கும்போது ஒருவர் நடந்து செல்வதற்கு ஏற்ற வகையில் இரண்டடி விட்டு அடுத்த பாத்தியினை அமைக்கலாம்.

நடுவதற்கு முன்பு நிலத்தினை சிறிது ஈரமாக்கி விதைக்கிழங்கினை நட வேண்டும்.

நட்டு மூன்றாம்நாளின் பின்பும் பயிர் சிறிது வளரும் வரைஉயிர்த் தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

அதாவது முதல் 30 நாட்களுக்கு வாரத்தில் மூன்று தடவை வீதமும் இரண்டாம் மாதத்தில் வாரத்திற்கு இரண்டு தடவை வீதமும் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

பின்பு மண்ணின் ஈரத்தன்மைக்கு ஏற்றாற் போல் வாரத்திற்கு ஒரு தடவை வீதம் கட்டாயம் நீர் பாய்ச்சவேண்டும்.

அதிகம் வெப்பம் உள்ள பிரதேசமாக இருந்தால் வாரத்திற்கு இரண்டு தடவைகள் கட்டாயம் நீர் பாய்ச்ச வேண்டும்.

மஞ்சள் நடவு செய்த மொத்த நாட்களில் 30வது நாளில் முதல் களை எடுப்பு, பின் ஐம்பதாவது நாளில் இரண்டாவது களை எடுப்பும், 120 ஆம் நாளில் மூன்றாவது களை எடுப்பும் பின்பு 150 வது நாளில் நான்காவது களை எடுப்புமாக எடுக்க வேண்டும்.



முதலாவது மற்றும் இரண்டாவது களை எடுப்பின் போது களைகளை முற்றாக கைகளால் பிடுங்கி எடுக்கும் பட்சத்தில் மூன்றாவது மற்றும் நான்காவது களை எடுப்பு எடுக்க வேண்டி அவசியம் ஏற்படாது.

மேலுரம் இடும்போது மண் அணைக்க வேண்டும்.

பின்பு உங்கள் தேவைக்கு ஏற்றால் போல் ஆறாவது மாதத்திலிருந்து எட்டாவது மாதம் வரை அறுவடையினை மேற்கொள்ள முடியும்.

எந்தஒரு ரசாயனமும் பயன்படுத்தாமல் முற்றுமுழுதாக இயற்கையாகவே உற்பத்தி செய்து அறுவடை செய்ய முடியும்.

பயிர் வளர்ப்பு ஊக்கியான ஜீவாமிர்தத்தையும், பஞ்சகாவ்யா, மீன் அமிலம் போன்றவற்றை வாரத்திற்கு ஒரு தடவை மாற்றி மாற்றி பாசன நீருடன் கலந்து பயன்படுத்தலாம்.

இவ்வாறு செய்வதனால் இலை கருகல் போன்ற வாடல் நோய்களிலிருந்து பாதுகாக்க முடியும்.

இயற்கை கிருமி நாசினிகளான கற்பூர கரைசல், மூலிகை கரைசல், புகையிலை கரைசல், அக்கினி அஸ்திரா போன்ற



இயற்கை கிருமி நாசினிகளையும் தேவை ஏற்றால் போல் பயன்படுத்தலாம்.

மஞ்சள் பயிரானது நடுகை செய்த நாளிலிருந்து ஆறு மாதத்திற்கு பிறகு மெது மெதுவாக இலைகள், தண்டுகள் மஞ்சள் நிறமாக மாறுதல், சாய்தல், உலர்ந்துவிடுதல் போன்றவை அறுவடைக்கான அறிகுறியாகும். கிழங்குகளை கலப்பை போன்ற மண்வெட்டி அல்லது குழிதோண்டும் கருவி கொண்டு தோண்டி எடுக்க வேண்டும்.

அதோடு மஞ்சள் கிழங்குகளை விதைக் கிழங்குகளுக்காக எடுக்க வேண்டுமாக இருந்தால் எட்டு மாதத்தில் அறுவடை செய்ய வேண்டும்.

அதாவது கிழங்கு ஒன்றை உடைத்து பார்க்கும் போது சாதாரண மஞ்சளாக இல்லாமல் மாறாக கரும் செம்மஞ்சள் நிறத்தில் இருந்தால் தயங்காமல் அறுவடை செய்யலாம்.

அறுவடை செய்த விதைக்கிழங்குகளை அதிக வெயிலில் வைக்காமல் இதமான வெப்பநிலையில் வைத்து களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும்.

பல இடங்களிலும் விளைச்சல் வெவ்வேறு அளவுகளில் இருந்தாலும்

ஒரு ஏக்கருக்கு பதப்படுத்தப்படாத பச்சை கிழங்குகள் அண்ணளவாக 10 -12 டன் கிடைக்கும். பதப்படுத்தப்பட்ட காய்ந்த கிழங்குகள் 3 - 4 டன் வரை கிடைக்கும்.

ஏக்கருக்கு 15 டன் விளைச்சல் பெற்ற விவசாயிகளும் இருக்கின்றார்கள் என்றால் அது மிகை ஆகாது.

நீர், ஆவி என இரண்டு முறைகளில் வேகவைக்கின்றார்கள்.

நீரில் வேக வைப்பதை விட ஆவியில் வேக வைத்தால் மஞ்சள் கிழங்கின் தரம் அதிகமாக இருக்கும் என்று கூறுகின்றார்கள் ஒரு சில விவசாயிகள்.

நீரில் வேக வைப்பது எமக்கு இலகுவாக இருக்கும்.

கிழங்குகளை சுத்தமான நீரில் தான் வேக வைக்க வேண்டும்.

கிழங்குகளைச் சரியான அளவு வேகவைக்கவேண்டும். அதிகமாக வேகவைத்தால் நிறம் மங்கிவிடும்.

இதனால் மஞ்சளின் தரம் குறைந்துவிடும். குறைவாக வேக வைத்தாலும் கிழங்குகள் காயும் போது நொறுங்கி உடைந்து விடும்.

ஆகையால் விவசாயிகள் கவனமாக செயல்பட வேண்டும்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கில் பதப்படுத்துவதாக இருந்தால் தண்ணீரினால் பல தடவை கிழங்குகளை நன்றாக சுத்தம் செய்து அவித்து காய வைக்க வேண்டும்.

நீர் கொதிக்க ஆரம்பித்த பின்னர் சில குறிப்புகள் மூலம் கண்டறிலாம்.

1 நல்ல மஞ்சள் வாசனை வீசும்.

2.நீர் கொதிக்கும் போது நுரை தள்ளும்.

3.நீரின் நிறம் மஞ்சளாக மாற ஆரம்பிக்கும்.

4. கிழங்கினை இலேசாக அமுக்கும் போது நெகிழ்ந்து கொடுக்கும்.

5. வெந்த கிழங்கினுள் சிறு குச்சியினை நுழைத்தால் அது எளிதில் உள்ளே செல்லும்.

6. மஞ்சளை உடைத்துப் பார்த்தால் உட்பாகம் செம்மஞ்சள் நிறம் மாறி. மஞ்சள் நிறமாக இருக்கும்.

இந்த சமயத்தில் கிழங்குகளை எடுத்து ஆறவிடவேண்டும்.

பின்பு வெயிலில் காய வைக்கவேண்டும். மழையில் நனைய விடக்கூடாது. ஒவ்வொரு நாளும் மூன்று அல்லது நான்கு முறை கிளறி விட்டு சீராக காயவிடவேண்டும். தினமும் மாலையில் கிழங்குகளை ஒன்றாகக் குவித்து மூடிவிடவேண்டும்.

சுமார் 10 நாட்களில் மஞ்சள் காய்ந்துவிடும். கிழங்குகள் உறுதியாக மாறிவிடும்.

இந்தப் பத்து நாட்கள் இடைவெளியில் இடையில் ஏதேனும் ஒரு தடவை மழையில் நனைந்தாள் மஞ்சளின் தரம் குறைந்த விடும் என்பதால் கவனமாக செயல்பட வேண்டும்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மை தொடர்பு கொள்ளவும்.

0770239784 - WhatsApp:0769196445

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)
சட்ட நடவடிக்கைகள், அபராதங்கள் அல்லது வரி அதிகாரிகள், ஒழுங்குமுறை அமைப்புகள் அல்லது பிற அரசு நிறுவனங்களிடமிருந்து பிற தடைகளை எதிர்கொள்ளலாம். சில சந்தர்ப்பங்களில், கணக்கியல் விதிமுறைகளுக்கு இணங்காதது சட்ட நடவடிக்கை அல்லது குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு (criminal charges) வழிவகுக்கும்.

நம்பகத்தன்மை இழப்பு (Loss of Credibility / Goodwill): மோசமான கணக்கியல் நடைமுறைகள் முதலீட்டாளர்கள், கடன் வழங்குபவர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் வணிகத்தின் நற்பெயர் மற்றும் நம்பகத்தன்மையை சேதப்படுத்தும். முதலீட்டாளர்கள் மற்றும் கடன் வழங்குபவர்கள் சரியான கணக்குப் புத்தகங்களை பராமரிக்காத வணிகத்தில் முதலீடு செய்யவோ அல்லது கடன் கொடுக்கவோ வாய்ப்பில்லை.

நிதி முறைகேடு (Financial Mismanagement): முறையான கணக்குப் பதிவுகள் இல்லாமல், வணிகங்கள் தங்கள் நிதி நிலையைப் பற்றிய முழுமையான புரிதல் இல்லாமல் இருக்கலாம். இது நிதி நிர்வாகமின்மை, முறையாக முடிவெடுக்காமை, மற்றும் இறுதியில் வணிகத் தோல்விக்கு வழிவகுக்கும்.

கடன்களைப் பாதுகாக்க இயலாமை (Inability to Secure Loans): வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் சரியான கணக்குப் புத்தகங்களை பராமரிக்காத வணிகங்களுக்கு கடன் கொடுக்க விரும்பாமல் இருக்கலாம். மூலதனத்திற்கான அணுகல் இல்லாமல், வணிகங்கள் வளர்ச்சி மற்றும் விரிவாக்கம் தடைப்படலாம்.

தணிக்கை / கணக்காய்வுச் சிக்கல்கள் (Audit Issues): ஒரு வணிகம் வரி அதிகாரிகள் அல்லது ஒழுங்குமுறை அமைப்புகளால் கணக்காய்வு செய்யப்பட்டுச் சரியான கணக்குப் புத்தகங்கள் பேணப்படாவிட்டால் கடுமையான நடவடிக்கைகள், மற்றும் சட்டரீதியான அபராதங்கள் போன்றவற்றிற்கு முகங்கொடுக்க நேரிடும்.

கணக்குப் புத்தகங்களை முறையாகப் பராமரிப்பதன் நன்மைகள் எவை?

கணக்குப் புத்தகங்களை முறையாகப் பராமரிப்பது தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்குப் பல நன்மைகளை விளைவிக்கும். அவற்றுள் சில பின்வருமாறு.

சட்ட இணக்கம் (Legal Compliance): வரிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் உட்பட சட்டத் தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்யும். சட்டரீதியான அபராதங்கள் மற்றும் அபராதங்களைத் தவிர்க்கவும் இது உதவுகிறது.

சிறந்த நிதி மேலாண்மை (Better Financial Management): தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் தங்கள் நிதி பரிவர்த்தனைகளைக் கண்காணிக்கவும், பூரணமான நிதித் தகவலின் அடிப்படையில் தகவலறிந்த முடிவுகளை எடுக்கவும் அனுமதிக்கிறது. இது பயனுள்ள நிதி திட்டமிடல் மற்றும் நிர்வாகத்திற்கு உதவுகிறது.


நிதித் தகவலுக்கான எளிதான அணுகல் (Easy Access to Financial Information): தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் தங்கள் நிதிப் பதிவுகளை எளிதாக அணுகலாம் மற்றும் தேவைப்படும் போதெல்லாம் சிறந்த மற்றும் தரமான நிதித் தகவலைப் பெறலாம். இது சரியான நேரத்தில் மற்றும் தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.

பட்ஜெட் மற்றும் முன்கணிப்பை எளிதாக்குகிறது (Facilitates Budgeting and Forecasting): துல்லியமான நிதிப் பதிவுகள் மதிப்புமிக்க நுண்ணறிவுகளை வழங்குகின்றன. அவை வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் நிதி முன்னறிவிப்புகளை உருவாக்க உதவுகின்றன. இது எதிர்காலத்திற்கான திட்டமிடல் மற்றும் நிதி இலக்குகளை அடைய உதவும்.

மேம்படுத்தப்பட்ட பணப்புழக்க மேலாண்மை (Improved Cash Flow Management): தனிநபர்கள் மற்றும் வணிகங்களின் வருமானம் மற்றும் செலவுகள் உட்பட அவர்களின் பணப்புழக்கத்தைக் கண்காணிக்க முறையான கணக்குப்பதிவு உதவுகிறது. செலவுக் குறைப்புகளைச் செய்யக்கூடிய பகுதிகளைக் கண்டறியவும், போதியளவு பண இருப்புகளைப் பராமரிக்கவும் இது உதவுகிறது.


சிறந்த வரித் திட்டமிடல் (Better Tax Planning): பூரணமான நிதிப் பதிவுகள் சிறந்த வரித் திட்டமிடலை அனுமதிக்கின்றன. ஏனெனில் தனிநபர்களும் வணிகங்களும் தங்கள் வரிப் பொறுப்பைக் குறைக்கக்கூடிய சாத்தியமான வரி விலக்குகள் மற்றும் வரவுகளை இலகுவாக அடையாளம் காண முடியும்.

ஒட்டுமொத்தமாக, இணக்கத்தை உறுதி செய்வதற்கும், தகவலறிந்து முடிவுகளை எடுப்பதற்கும், நிதி இலக்குகளை அடைவதற்கும் முறையான கணக்குப்பதிவு அவசியம். தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் தங்கள் நிதிகளை திறம்பட மற்றும் திறமையாக நிர்வகிக்க இவை உதவுகின்றன.





# வர்த்தக நிறுவனங்களின் போட்டியினால் ஆபத்தானதாகும் செயற்கை நுண்ணறிவு



> தேடுபொறிகளுடன் செயற்கை நுண்ணறிவையும் இணைத்துவிட்டால், ஒரு நாளில் பல கோடித் தேடுதல்கள் மேற்கொள்ளப்படும். அப்படியெனில், மின்சாரத் தேவை பல மடங்கு அதிகரித்துவிடும். சுற்றுச்சூழலைப் பாதிக்கும் எரிபொருளைக் கொண்டுதான் இந்தத் தேவைக்கான மின்சாரத்தை உருவாக்க முடியும். இது பொருளாதார, சுற்றாடல் பிரச்சினைகளை உருவாக்கும்

– வினோத் ஆறுமுகம் –

சாட்ஜிபிடி போன்ற செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களின் வருகையால், சமூகத்தில் ஏற்படவிருக்கும் ஆபத்துக்கள் குறித்துத் தொடர்ந்து பேசப்பட்டுவருகிறது. இந்நிலையில், இந்த மென்பொருள்களால் எதிர்காலத்தில் கார்பன் உமிழ்வு (Carbon emission) அதிகரித்து, சுற்றுச்சூழல் கேடுகள் ஏற்படும் எனச் சுற்றுச்சூழல் செயல்பாட்டாளர்கள் கவலை தெரிவித்திருப்பது, இவற்றின் அபாய எல்லைகள் விரிவடைந்து கொண்டே செல்வதை உணர்த்துகிறது. இது பொருளாதாரத்திலும் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

### பின்னணிப் பிரச்சினைகள்

ஓபன்ஏஐ (OpenAI) நிறுவனம், 'சாட்ஜிபிடி' (ChatGPT) என்னும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளைச் சில மாதங்களுக்கு முன் அறிமுகப்படுத்தியது. இதையடுத்து, இந்த மென்பொருளைத் தங்கள் 'பிங்' (Bing) எனும் தேடுபொறியுடன் இணைக்கும் பணியில் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் ஈடுபட்டது. இதனால் கவலையடைந்த கூகுள் நிறுவனம், உடனடியாக 'பார்டு' (Bard) எனும் செயற்கை நுண்ணறிவு அரட்டை மென்பொருளைக் களமிறக்கியது.

இந்தப் பந்தயத்தில் அமேசான் நிறுவனமும், சீனாவின் பைடு நிறுவனமும் இணைந்திருக்கின்றன. செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள்பல வேலைகளை எளிமையாக்கும் என்பது உண்மைதான். ஆனால், உடன்விளைவாகப் பல பிரச்சினைகளையும் கொண்டுவருவது தான் கவலைக்குரிய விஷயம் அவற்றில் குறிப்பிடத்தக்கது கார்பன் உமிழ்வு.

பல்வேறு நிறுவனங்கள் ஆற்றல் பயன்பாட்டின்போது, கடந்த ஆண்டில் அதிக அளவு கார்பன் உமிழ்வு நிகழ்ந்திருப்பதாகப் பன்னாட்டு ஆற்றல் முகவரகம் (International Energy Agency) கண்டறிந்துள்ளது. கார்பன் உமிழ்வால் புவி வெப்பமாதல் வேகமடைந்து, அதன் நீட்சியாகக் காலநிலை மாற்றத்தின் விளைவுகளாகப் பல சிக்கல்கள் ஏற்படும்.

அவை பல புதிய சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உருவாக்கும் என அறிவியலாளர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். இந்நிலையில், சாட்ஜிபிடி போன்ற செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களைத் தேடுபொறிகளுடன் இணைத்தால், கார்பன் உமிழ்வு அதிகமாவதைத் தவிர்க்கவே முடியாது.

### பிரமாண்டத் தரவு மையங்கள்

சாட்ஜிபிடி மாதிரியான செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் இயங்க,



அவை இயந்திரக் கற்றலை (Machine Learning) மேற்கொள்ள வேண்டும். அதாவது, இணையத்தில் இருக்கும் தகவல்களை உள்ளீடு செய்வதன் மூலம், அந்தத் தகவல்களைப் பகுத்தாராய்ந்து, அவற்றிலிருந்து கற்க இந்த மென்பொருள்கள் முயல்கின்றன.

இந்த இயந்திரக் கற்றலை நிகழ்த்த, பல தரவு மையங்கள் (Data Centers), 24 மணி நேரமும் இயங்கியாக வேண்டும். மேம்படுத்தப்பட்ட பல ஆயிரம் கணினிகளை ஒன்றிணைத்துத் தரவு மையங்கள் உருவாக்கப்படுகின்றன. அந்தக் கணினிகள் GPU (Graphics Processing Unit) எனப்படும் அதிவேகக் கணிதம் மேற்கொள்ளும் பிராசஸர்களைக் கொண்டிருக்கும்.

சுமார் 35,000 சதுர அடிகளுக்கு ஒரு தரவு மையம் விரிந்திருக்கும். மிக வேகமாகக் கணினிகள் இயங்குவதைக் கணினி ஆற்றல் (Computing Power) என்கிறோம். செயற்கை நுண்ணறிவுக் கணினிகள் இயங்க அத்தகைய கணினி ஆற்றல் வேண்டும். நாம் பயன்படுத்தும் கணினியைவிட இதன் ஆற்றல் இலட்சம் மடங்கு அதிகம்.

அவ்வளவு கணினிகளும் 24 மணி நேரம் இயங்கினால், இயந்திரங்கள் சூடாகத் தொடங்கும். இந்தச் சூட்டைத் தணித்துக் குளிர்விக்கவில்லை எனில், கணினிகள் எரிந்துவிடும். இப்படி பிரம்மாண்டமான தரவு மையங்களின் கணினிச் சூட்டைத் தணிக்கப் பல தொழில்நுட்பங்கள் கையாளப்படுகின்றன.

நூற்றுக்கணக்கில் அல்லது ஆயிரக் கணக்கில் குளிர்சாதனப் பெட்டிகள், மின்விசிறிகள் இதற்காகப் பயன்படுத்தப்படும். அப்படியெனில், இவ்வளவு பெரிய தரவு மையத்தை இயக்க எவ்வளவு மின்சாரம் தேவைப்படும் என்பதை நாம் கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளலாம். இந்த மின்சாரம் முழுக்க முழுக்கச் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் புதைபடிவ எரிபொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

### கார்பன் உமிழ்வு

சாட்ஜிபிடியின் முந்தைய பதிப்பைப் பயிற்றுவிக்க, சுமார் 1,287 மெகாவாட் - ஹவர் ஆற்றல் தேவைப்பட்டது.

(23ஆம் பக்கம் பார்க்க)

> புதிய முயற்சியாளர்கள் திரவப் பாலை விநியோகம் செய்ய முயன்றால் அது மிகப்பெரிய வாய்ப்பாகும். மக்களின் தேவை அதிகமாக இருப்பதால் இது சாத்தியமாகும். எனினும் இதற்கு அரசு உதவ வேண்டும். உள்ளூர் உற்பத்தியாளரை ஊக்குவிக்க வேண்டும். இறக்குமதிக்கு வரி விதிக்க வேண்டும்.



# திரவப் பால் நுகர்வு



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

திரவப்பால் நுகர்வை பாடசாலை மாணவர்களிடையே ஊக்குவிக்கும் பொருட்டு கடந்த வாரம் ஒரு விழிப்புணர்வுக் கருத்தரங்கை எனது செட்டிகுளம் கால்நடை வைத்தியர் பிரிவில் நடத்தியிருந்தேன். இதன் போது நான் அவதானித்த மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் தெரிவித்த விடங்கள் காரணமாக இந்த பதிவை எழுதுகிறேன். இப்படியான கருத்தரங்குகளில் மாணவர்களுக்கு குடிப்பதற்கு பாலை கொடுப்போம். கணிசமான மாணவர்கள் தாம் பாலை குடிப்பது கிடையாது என கூறியிருந்தனர். (திரவப் பால் என நான் குறிப்பிடுவது நேரடியாக பசு, எருமை, ஆடுகளில் இருந்து பெறப்படும் பவுடரல்லாத பால்) பால் மாவை விட திரவப் பால் சுவை குறைந்தது. ஒருவித மணம் வரும். குடித்தால் சளி பிடிக்கும். என பல காரணங்கள் மாணவர்களால் சொல்லப்பட்டது. ஆசிரியர்கள், பால் கிடைப்பது அரிது என சொன்னார்கள். முன்பெல்லாம் நகரங்களில் மாத்திரமே பால் தட்டுப்பாடு காணப்பட்டதாகவும் தற்போது பால் மாடுகள் தாராளமாக உள்ள கிராமங்களிலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விசனப்பட்டார்கள். காலையில் சற்று பிந்தினால் பால் விற்கும் இடங்களில் பால் கிடைக்காது என்பதாகவும், இதனால் பலர் விலை கூடினாலும் பால் பவுடரை வாங்குவதாகவும் சொன்னார்கள். பலர் செலவு கூடக்கூட பால் குடிப்பதையும் நிறுத்தி விட்டார்கள்.



தற்போதய காலத்தில் கறக்கப்படும் பால் அதிகளவில் பால் கொள்வனவு செய்யும் நிறுவனங்களுக்கே வழங்கப்படுகின்றது. இதன் மூலம் மக்களுக்கு வருமானம் கிடைக்கின்ற போதும் எதிர் மறை விளைவாக உள்ளூர் நுகர்வு பாதிக்கப்படுகிறது. கிராமத்தில் நிகழும் ஓர் உற்சவத்துக்கு கூட ஓர் அளவுக்கு மேல் பாலைப் பெறுவதே மிகவும் சிரம்மான காரியம். நகரங்களில் நினைத்தும் பார்க்க முடியாது. பால் பண்ணையாளர்கள் மக்களுக்கு பாலை நேரடியாக கொடுக்க விரும்புவதில்லை. இன்று உங்களுக்கு பாலை தந்தால் நாளை பால் நிறுவனங்கள் எங்கள் பாலை எடுக்க மாட்டார்கள் என அச்சப்படுகின்ற நிலைதான் உள்ளது.

எனது பிரிவில், புலம்பெயர்ந்த தமிழர் ஒருவர் சிறிய பால் பொருள் தயாரிக்கும் நிறுவனத்தை தொடங்கியிருந்தார். நெய், தயிர், பட்டர், சீஸ், பன்னீர் என பல பொருட்களை அவர் தயாரிக்கிறார். அந்த சிறிய தொழிற்சாலையின் மூலம் 2-3 உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்திருந்தது. அவர் பால் தொழில் நுட்பம்



தொடர்பான பல கற்கை நெறிகளை கற்றதோடு பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பால் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு சென்று பயிற்சிகள் பெற்ற அனுபவம் உடையவர். அவர் தயாரிக்கும் பொருட்களில் சுவையும் தரமும் அதிகமாக இருக்கும். பல புதிய உற்பத்திகளும் இருக்கும்.

எனினும்,அவர் பால் பொருள் உற்பத்தி செய்ய தேவையான பால் அவருக்கு கிடைப்பதில்லை தினமும் நூற்றைம்பது லீட்டர் வரையான பால் கிடைத்தால்தான் நட்டமில்லாமல் இந்த தொழிலை செய்யலாம் என்ற நிலையில் 50 லீட்டர் வரையே அவருக்கு பால் கிடைப்பதாக கவலைப் பட்டார். பால்மாடுகள் நிறைந்த அந்தப் பகுதியிலேயே இந்த நிலை. பாலை பெற அவர் அதிக விலை கொடுத்த போதும் பால் சேகரிப்பு நிறுவனங்களின் அழுத்தத்தால் அவருக்கு பாலை வழங்க பலர் பின்னடிக்கின்றனர். இப்படியே போனால் அவர் அந்த தொழிற்சாலையை மூட வேண்டிவரலாம். (அவருக்கு சில பால்தரும் நல்லின மாடுகளை வளர்க்க எனது ஆலோசனையை சொல்லியிருக்கிறேன்.) பாலை நேரடியாக விற்பனை செய்வதை விட பால்பொருட்கள் செய்து விற்பது இலாபகரமானது.

மீளவும் மாணவர்களின் பால் நுகர்வுக்கு வருவோம். கணிசமானவர்களின் வீடுகளில் பால் மாடுகள் இருப்பதாக சொன்னார்கள். அனைவரும் பால் நிறுவனங்களுக்கு பால் வழங்குபவர்களாக இருந்தார்கள். அதிலும் சிலர் தமது பசு மாடுகளில் பாலைக் கறந்து நிறுவனங்களுக்கு வழங்கிவிட்டு தாம் பால் பவுடரை வாங்கி குடிப்பவர்களாக இருந்தார்கள். கனியிருக்க காய் நுகர்வது போல. எங்களால் முடிந்த வரை திரவப் பாலின் பயனையும் பால் பவுடரினை விட அதன் பயனையும் விளங்கப் படுத்தினோம். ஒரு மாணவனாவது மாற்றமடைய மாட்டானா எனும் நப்பாசை.

"பாலில் உள்ள தண்ணீர் அகற்றப்பட்டு இயற்கையான கொழுப்பு அகற்றப்பட்டு (பட்டர் செய்ய) புரதம் அகற்றப்பட்டு (whey புரதம் செய்ய) செயற்கையான கொழுப்புகள் (பாம் எண்ணை, பன்றிக் கொழுப்பு) செயற்கையான புரதம் (மெலமைன்) போன்றன சேர்த்து சுவையூட்டிகளை கலந்து செய்யும் கலவைதான் இந்த பால் பவுடர்" என பிள்ளைகளுக்கு தெரியப்படுத்தினோம். அதிக வெப்பத்தில் சூடாக்குவதால் பல ஊட்டச் சத்துக்கள் குறைவதையும் பல சத்துக்கள் மாற்றமடைவதையும் பல நோய்களுக்கு வாய்ப்பாக அமையும் விதத்தையும் சொன்னோம். மேலும் இந்த ஊட்டச்சத்துக்கள் திரவப்பாலில் அப்படியே இருப்பதையும் சொல்லத் தவறவில்லை.

இலங்கையில் நுகரப்படும் பால்பவுடர் பெரும்பாலும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் இருந்துதான் வருகிறது. ஒருவித சர்வதேச ஏல முறையின் மூலமே கொள்



வனவு ஆகிறது. உலக சந்தையில் அதிக கேள்வி நிகழும் போது விலையும் கூடும். அத்துடன் இந்த வியாபாரம் அமெரிக்க டொலரில் நிகழ்வதால் இன்றைய இலங்கையின் பொருளாதார நிலையில் அதிக செலவு மிக்கது. கணிசமான பணக் கையிருப்பை காலி செய்யும் ஒரு முக்கிய காரணியாகும்.

நாங்கள் வழங்கிய பாலில் சுவையை கூட்ட ஏலக்காய் போன்றவற்றை சேர்த்திருந்தோம். இதனால் பாலை விரும்பாத பலரும் விரும்பிக் குடித்திருந்தனர். இது ஒரு வெற்றிகரமான மாற்றமாகும். பாடசாலை மாணவர்களில் குறிப்பாக கிராமப்பிறங்களில் கணிசமானவர்கள் போதிய ஊட்டச்சத்தான உணவுகளை உண்பதில்லை. போசணை குறைபாடு கணிசமாக காணப்படுகிறது. இன்றைய இலங்கையின் பொருளாதார சிக்கலால் இந்த நிலை இன்னும் அதிகமாக உள்ளது. ஒழுங்கான ஊட்டம் கிடைக்காவிட்டால் மாணவருக்கு ஒழுங்காக கல்வியில் நாட்டம் வராது. இதனால் அரசாங்கமும் அமைப்புகளும் இந்த விடயத்தில் கவனமெடுத்து பிள்ளைகளுக்கு திரவப்பால், முட்டை வழங்குதல் போன்றவற்றை செய்தால் ஓரளவுக்கு அவர்களின் போசணையை மேம்படுத்தலாம்.

பால் நிறுவனங்களுக்கு பாலை வழங்குவது பண்ணையாளரின் வரு



மானத்தை மேம்படுத்துவதோடு பாலின் தரமும் சீராக பேணப்படுகிறது. எனினும் உற்பத்தியாகும் மொத்தப் பாலும் நிறுவனங்களே எடுக்கும் வகையான நிலை தவறானது. உள்ளூர் நுகர்வுக்கும் பால் இருக்க வேண்டும். அது ஒரு சமனிலையாக பேணப்பட வேண்டும். அதற்காக பால் உற்பத்தி கூட வேண்டும்.தற்போதய பால் பவுடரின் விலை கூடிய நிலையில் திரவப்பாலின் கேள்வி கூடியுள்ளது. இலங்கையின் பால்த்தேவையில் 45% வரையிலேயே உள்ளூரில் இருந்து கிடைக்கிறது. இன்னும் 55% தேவை உள்ளது. மிஞ்சினால் ஏற்றுமதியும் செய்யலாம்.

நியூசிலாந்து அப்படித்தான். தமது நுகர்வை விட பலமடங்கை ஏற்றுமதி தான் செய்கிறது. (நியூசிலாந்தின் உள்ளூர் நுகர்வுக்கு பால் பவுடரை பாவிப்பது அரிது. திரவப் பால்தான்). புதிய முயற்சியாளர்கள் திரவப் பாலை விநியோகம் செய்ய முயன்றால் அது மிகப்பெரிய வாய்ப்பாகும். மக்களின் தேவை அதிகமாக இருப்பதால் இது சாத்தியமாகும். எனினும் இதற்கு அரசு உதவ வேண்டும். உள்ளூர் உற்பத்தியாளரை ஊக்குவிக்க வேண்டும். இறக்குமதிக்கு வரி விதிக்க வேண்டும். மக்களும் மனம் மாற வேண்டும்.திரவப் பாலை அதிகம் குடிக்க வேண்டும். இதற்காக இந்திய முறைகளை முன்மாதிரியாக கொள்ளலாம். மனமுண்டானால் இடமுண்டு.



# கைவைத்தியமும் கொல்லைப்புற மரக்கறிகளும்

வேதநாயகம் தபேந்திரன்



"வேலிகளுக்கு விடை கொடுத்து ஸ்ரைல் என மதில்களைக் கட்டினோம். பொட்டுகள்,கடப்புகளால் உறவாடிய உயிரும் உணர்வுமான சமுதாயத்தை மட்டும் தொலைக்கவில்லை. இயற்கை தந்த நோய் தீர்க்கும் பாரமபரியத்தையும் தொலைத்தோம். பாரம்பரிய அறிவையும் தொலைத்தோம்."

கைவைத்தியம் என்றொரு சொல்லாடல் எம்மிடையே மிகத் தாராளமாக இருந்த ஒரு காலம் இருந்தது. வீட்டின் கோடிப் புறமோ ,வேலிப் புறமோ ,தோட்டப் புறமோ மூலிகைச் செடிகள் எனப் பல தாவரங்களையும் செடி கொடிகளையும் பேணிய ஒரு காலம் இருந்தது.

வேலிகளுக்கு விடை கொடுத்து ஸ்ரைல் என மதில்களைக் கட்டினோம். பொட்டுகள்,கடப்புகளால் உறவாடிய உயிரும் உணர்வுமான சமுதாயத்தை மட்டும் தொலைக்கவில்லை. இயற்கை தந்த நோய் தீர்க்கும் பாரமபரியத்தையும் தொலைத்தோம். பாரம்பரிய அறிவையும் தொலைத்தோம்.

உலகின் அதி நவீன வசதிகள் யாவும் காலடிக்கு வந்து விட்டன. வாழ்வது சுகமாகி விட்டது. ஆனால் வாழ முடியாமல் கஸ்டப்படுகிறோம்.

தூதுவளை மிக நல்லதொரு மருத்துவச் செடி. இதன் இலைகளை எடுத்துச் சம்பல் இடிக்கும் போது சேர்க்கலாம். மிகுந்த ஆரோக்கியமானது.

கீரைப் பிட்டு அவிக்கும் போது தூதுவளை இலை சேர்த்தும் அவிக்கலாம்.

மொசுமொசுக்கை இலைகள் எடுத்து நன்கு கொதித்த தண்ணீரை டம்ளர் ஒன்றில் சிறிதளவு மல்லியுடன் போட்டு மூட வேண்டும். பத்து நிமிடம் கழித்து மொசு மொசுக்கை இலைகளை எடுத்து நீக்கி விட்டு அந்தத் தண்ணீரைக் குடித்தால்சளித்தொல்லை நீங்கும்.

இந்த இலைகளை பச்சை மிளகாய், வெங்காயம் சேர்த்துச் சம்பல் இடித்தும்உணவாக உண்ணலாம்.

கற்பூரவள்ளி இலைகளை வாயில் அரைத்து மென்று விழுங்க வேண்டும். சளித்தொல்லை போக்கும் அருமையான மருத்துவக் குணம் கற்பூர வள்ளி இலைகளுக்கு உண்டு.

கறிமுருங்கை இலைகள் தான் உலகிலேயே இரும்புச் சத்துக் கூடுதலாக உள்ள இலைகள் எனக் கூறுகின்றனர். இந்த இலைகளை எடுத்துத் தூள் தூளாக அரிந்து வறை செய்து சாப்பிட்டால் உடல் பலம் பெறும் மலச்சிக்கல் வராது.

கிணற்றடித் தண்ணீர் போகும் இடத்தில் வாழை நடுங்கள். வாழைப் பொத்தியை எடுத்துத் தூள் தூளாக அரிந்து அளவான தேங்காய்ப்பூ, உப்பு சேர்த்து வறை செய்து சாப்பிடுங்கள். அருமையான உணவு மலச்சிக்கல் எட்டியும் பாராது.

வாழைக்குத் தண்ணீர் போகும் வாய்க்கால் கரை ஓரங்களில் வல்லாரை, பொன்னாங்காணி போன்றவற்றை நடுங்கள். அவை நன்கு பற்றிப் படர்ந்து வளரும். இதன் இலைகளையும் தவணை முறையில் நாளாந்தம் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

சிங்கள மக்களது நாளாந்த உணவில் கீரை வகை ஒன்று, பழம் ஒன்று கட்டாயம் இருக்கும்.

அதனால் அவர்களுக்குத் தொற்றா நோய்கள் தாக்குவது குறைவு.

மலச்சிக்கல் மனச்சிக்கலைத் தந்து உடல் ஆரோக்கியச் சிக்கலையும் தரும். ஆகவே நார்தன்மை உள்ள கீரை, வாழைப்பொத்தி, முருங்கை இலை, சண்டி இலை, வல்லாரை, பொன்னாங்காணி, புழுக்கொடியல், ஒடியல் மா பிட்டு போன்றவற்றை நாளாந்தம் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்.

எடுத்ததுக்கெல்லாம் பரியாரியிடம் போகாத பாரம்பரிய மருத்துவம் தெரிந்த அம்மாக்களின் தலைமுறையும் விடை பெற்றுச் செல்கிறது. மதில்களும் கொங்கிறீற் நிலங்களும் கொல்லைப்புற மரக்கறிகளையும் ஆரோக்கியத்தையும் காசுச் சேமிப்பையும் தொலைத்து வருகிறது.

பணவீக்கத்தினால் துன்பப்படும் நிலையைத் தவிர்க்க இவை தொடர்பான தேடலுக்கு மீண்டும் போவோம்.

(19ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அளவு ஆற்றலைக் கொண்டு நாம் சென்னை முதல் டெல்லி வரை விமானத்தில் 1,200 முறை பறந்திருக்கலாம். சாட்ஜிபிடியின் தற்போதைய பதிப்பு இன்னும் அதிக ஆற்றல் தேவைப்படக் கூடியது. ஒருவேளை, தினமும் பல கோடிப் பேர் அதைப் பயன்படுத்துவதாக இருந்தால், அதன் ஆற்றல் தேவை இன்னும் அதிகமாக இருக்கும்.

இதைத் தேடுபொறிகளுடன் இணைத்துவிட்டால், ஒரு நாளில் பல கோடித் தேடுதல்கள் மேற்கொள்ளப்படும். அப்படியெனில், மின்சாரத் தேவை பல மடங்கு அதிகரித்துவிடும். சுற்றுச்சூழலைப் பாதிக்கும் எரிபொருளைக் கொண்டுதான் இந்தத் தேவைக்கான மின்சாரத்தை உருவாக்க முடியும் என்பதால், இதன் கார்பன் உமிழ்வு தற்போது இருப்பதைவிட ஐந்து மடங்கு அதிகமாகச் சாத்தியமுள்ளது.

கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்த, இன்றைக்குப் பல்வேறு முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. மறுபுறம், கூகுள் தேடுபொறி கணிசமான அளவு கார்பன் உமிழ்வை உருவாக்குகிறது. கூகுள் தரவு மையங்களின் கார்பன் உமிழ்வைப் பற்றிய தகவல்கள் வெளிப்படையாக இல்லை. ஆனால், கார்பன் உமிழ்வைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளதாக கூகுள், மைக்ரோசாஃப்ட் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சூழலியல் ஒப்பந்தத்தைப் பொறுத்து



உலகின் கார்பன் உமிழ்வை 2050க்குள் நிகரப் பூச்சியத்துக்குக் குறைக்க வேண்டும் என்பதுதான் இலக்கு ஆனால், அது அவ்வளவு எளிதானதல்ல. கார்பன் உமிழ்வால் ஏற்படும் புவி வெப்பமாதல் உள்ளிட்ட சுற்றுச்சூழல் சிக்கல்கள் குறித்து அனைவருக்கும் தெரியும் என்றாலும், இன்றைய குடிமைச் சமூகத்துக்கு ஆற்றலின் தேவை என்பது அதிகரித்துக்கொண்டே போகிறது. இதனால் நிகர பூஜ்ஜியத்தை எட்டுவதில் பல தடங்கல்கள் உள்ளன.

உலக கார்பன் உமிழ்வைப் பொறுத்தவரை, தரவு மையங்கள் உருவாக்கும் கார்பன் உமிழ்வு குறித்து மிகுந்த கவனத்தைச் செலுத்த வேண்டியது அவசியம். வரும் 2030க்குள் கார்பன் உமிழ்வை நிகரப் பூச்சியத்துக்குக் கொண்டுவர கூகுள் நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

மைக்ரோசாப்ட் நிறுவனம் 2050 வரை கால அவகாசம் கேட்டுள்ளது. ஆனால், சிக்கலை அதிகப்படுத்தும் விதமாக நவீன செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களுக்குத் தேவையான புதிய அளவு கணினி ஆற்றல் காரணமாக, அதிக அளவு கார்பன் உமிழ்வு ஓர் அபாயமாக மாறவிருக்கிறது.

## தீர்வுகள்

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் ஏற்படும் எதிர்மறை விளைவுகளைக் குறைக்க வழிகள் இருக்கின்றன. தரவு மையங்களுக்குத் தேவையான ஆற்றலை, சுற்றுச்சூழல் பாதிப்பில்லா இயற்கைக்கு இணக்கமான ஆற்றல் உற்பத்தி முறையில் உருவாக்குவது குளிரூட்டப்படும் தொழில்நுட்பத்தில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு அதைக் குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட தொழில்நுட்பமாக உருவாக்குவதுசெயற்கை நுண்ணறிவின் அல்காரிதங்களில் பல புதிய மேம்படுத்தல்களை மேற்கொண்டு அதன் சிறப்புத் தன்மைகளை அதிகப் படுத்துவது - இதன் மூலம் கணினிக்குத் தேவைப்படும் ஆற்றலைக் குறைப்பது நிறுவனங்கள் லாபநோக்கத்தில் போட்டி போட்டுச் செயல்படுவதற்குப் பதிலாக, ஒன்றிணைந்து சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாத செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது எனப் பல தீர்வுகள் உள்ளன.

வணிகப் போட்டியைக் கைவிட்டு பெருநிறுவனங்கள்தான் இதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அரசுகளும் இதற்கான கொள்கை - சட்ட வரைமுறைகளை உருவாக்க வேண்டும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் மனிதகுலத்துக்குச் சாபமாக மாறுவது தவிர்க்கப்பட வேண்டும்.

வரம் முற்றம்
05-02-2023 முதல் புதிய இடத்தில்
551, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு எதிரில்
உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை
பனைசார் உற்பத்திப் பொருட்கள் தும்பு உற்பத்திப் பொருட்கள்
இயற்கை விவசாய மரக்கறிகள் இயற்கை விவசாய இடுபொருட்கள்
வீட்டுத்தோட்ட மரக்கன்றுகள் இயற்கை உரங்கள்
கைவினைப் பொருட்கள் மட்பாண்டம் பாதணிகள்
உலர் உணவுப் பொருட்கள் கடல் உணவுப் பொருட்கள்
இரசாயனமற்ற ஆரோக்கிய பானங்கள்
ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள் சித்திரங்கள்
பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)
076 443 8620
உள்ளூர் உற்பத்தி - கலாசாரம் - பாரம்பரியம்

# எங்கட ஆச்சி





- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

> மூண்டு அறிவும் இருக்கிற ஒருந்தனாலைதான் தானும் சரியாக வாழ்ந்து மற்றவனையும் சரியாக வாழச்செய்ய ஏலும். இல்லாட்டால் வாழ்க்கை எண்டது முழுமை இல்லாமல்போடும்

அறிவு எண்டால் என்னண்டால் அறியப்பட்ட தகவல்கள், விபரங்கள், எண்ணங்கள், கருத்துக்கள், நடைமுறைகள் எண்டு பொருள் இருக்குது எண்டு ஆச்சி சொல்லுவா. இதுக்கு மேலாலை மனுச வாழ்க்கையைச் சரியான திசையில் இயக்கிற இல்லாட்டில் கொண்டு போற கருவி எண்டும் அறிவைச் சொல்லலாம் எண்டு அவ சொல்லுவா.

அவவைப் பொறுத்தவரையில் அறிவு எண்டது கற்ற அறிவாக, பெற்ற அறிவாக, உற்ற அறிவாக இருக்கலாம். இப்ப முறை சார்ந்த கல்வி முறைசாராக் கல்வி எண்டு சொல்லுற முறையளாலை வாத்திமாரிட்டை படிச்சு எடுக்கிற அறிவு கற்ற அறிவாகும் எண்டுவா. அதமாதிரி எங்கடை வாழ்க்கை அனுபவத்துக்காலை அதில இருக்கிற ஏற்றம், இறக்கம், உயர்வு, தாழ்வு, சோதனை, வேதனை, சாதனை எல்லாத் தாலையும் ஒரு மனுசனுக்கு அறிவு வந்திச்சுது எண்டால் அதைப் பெற்ற அறிவு எண்டு அவ சொல்லுவா. அதாவது பட்ட அறிவு இல்லாட்டில் அனுபவ அறிவு பெற்ற அறிவாகும் எண்டு அப்பு அதுக்கு விளக்கம் சொல்லுவார்.

இந்த ரெண்டு அறிவையும் வைச்சுக் கொண்டு சரி எது பிழை எது எண்டு ஆராய்ச்சி செய்து உய்த்து ஒருத்தன் எடுத்து தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளுற அறிவு பகுத்தறிவு. உதைத்தான் உற்ற அறிவு எண்டு சொல்லுறது எண்டிற அப்பு ஒரு மனுஷனுக்கு முக்கியமா இருக்க வேண்டிய அறிவு, மனுசனுக்கு மட்டுமே சொந்தமான அறிவு, மனுசனுக்குரிய அறிவு உந்த உற்ற அறிவாகும் எண்டுவார்.

உந்த உற்ற அறிவை மனுசனுக்கு உரிய அறிவு எண்டு சொல்லுறதுக்கு காரணம் இருக்குது எண்டுவார் அப்பு. உண்ணான எந்த மிருகத்தாலயும் உந்த முதல் ரெண்டு அறிவுகளையும் பெற்றுக் கொள்ள ஏலும். உதாரணமாப் பாத்தம் எண்டால் எங்கட வீடுகளிலை நிக்கிற ஆடு, மாடு, நாய், பூனை எல்லாத்துக்கும் நாங்கள் சில விசயங்களைப் பழக்கிறம் அதுகளும் பழகுதுகள். அதே மாதிரி அதுகள் அனுபவத்தாலையும் சிலதுகளை அறிஞ்சு கொள்ளும். உதாரணமா மாடுகளுக்கு மேயப்போகேக்கை வயலுக்கை தண்ணி குடிக்க எங்க கேணி இருக்குது எந்தப் பாதையாலை போனால் வீட்டை போகலாம் எண்டது எல்லாம் தெரியும். ஆனால் அதுகளுக்கு உந்தப் பகுத்தறிவு இல்லை எண்டுவார் அப்பு .

எந்த அறிவாக இருந்தாலும் திருவள்ளுவர் சொன்னது மாதிரி கசடறக்கற்க வேணும் எண்டுவா ஆச்சி. அப்பதான் அறிவு எண்ட கருவியைச் சரியாகப் பாவிக்க ஏலும். இல்லாட்டால் அழிவில முடிஞ்சு போகும் இதுக்கு எங்களிட்டை நிறைய வரலாற்று ஆதாரங்கள் இருக்குது எண்டுவா. இந்த மூண்டு அறிவுகளுமே தனிவாழ்விலும் சரி, குடும்ப வாழ்விலும் சரி, சமூக வாழ்விலும் சரி, பொது வாழ்விலும் சரி, அரசியல் வாழ்விலும் சரி, ஆன்மீக வாழ்விலும் சரி ஒரு மனிதனிற்கு மிக முக்கியம் எண்டு அவ நெடுகவும் சொல்லுவா.

உந்த அறிவுகளிலை ஒண்டோ இல்லாட்டில் ரெண்டோ மட்டும் இருந்து பிரயோசனமில்லை. கற்ற அறிவு மட்டும் இருந்து பெற்ற அறிவும் உற்ற அறிவும் இல்லாதவன் கற்ற முட்டாளாயிருப்பான் உதுக்கு கன படிச்ச ஆக்கள் எண்டு சொல்லுறவையை உதரணமா எடுக்கலாம் எண்டுவா. அத மாதிரி பெற்ற அறிவு மட்டும் இருந்து கொண்டு மற்ற அறிவு ஒண்டும் இல்லாதவன் பட்டும் அறிவைப் பெறாதா முட்டாளாயிருப்பான். உப்பிடிக்கொத்த ஆக்களை அரசியலிலை வடிவாப் பாக்கலாம். கற்ற அறிவு பெற்ற அறிவு எண்ட ரெண்டும் இல்லாமல் உற்ற அறிவு மட்டும் இருக்கிற ஒருத்தன் எப்பவும் குதர்க்கம் பேசுற முட்டாளாய் இருப்பான். உப்பிடிக்கொத்த ஆக்களை இலக்கியத் துறையில நிறையப் பாக்கலாம் எண்டிற ஆச்சி இப்படியான ஆக்கள் தாங்களும் சரியா வாழமாட்டாங்கள் மற்ற சனத்துக்கும் அவங்களாலை வழிகாட்டவும் ஏலாது.

மூண்டு அறிவும் இருக்கிற ஒருந்தனாலைதான் தானும் சரியாக வாழ்ந்து மற்றவனையும் சரியாக வாழச்செய்ய ஏலும். இல்லாட்டால் வாழ்க்கை எண்டது முழுமை இல்லாமல்போடும். அப்பிடி மூண்டு அறிவும் இல்லை எண்டால் அவங்களாலை முன்னெடுக்கப்படும் எந்த விசயமும் முழுசாகாமல் வீணாகிப்போகும் எண்டிற ஆச்சி இப்ப இந்தக் காலத்திலை எங்கடை அரசியலிலையும் சரி, ஆன்மீகத் திலையும் சரி, இலக்கியத்திலையும் சரி உந்த மூண்டு அறிவும் உள்ள ஆக்கள வலு குறைவு எண்டா.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.05.2023இல் வெளியிடப்பெற்றது.